...d. No. M. 2210

வருஷ சந்... [torn]

AUTHOR & PROPRIETOR

வை. மு. கோதைநாயகி அம்மாள்

(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 MARCH 1931 இதழ் 4

JL
ഷ211, N24J'M
N31 · 8 · 4
210030

...ன்மோகினி ஆபீஸ்,
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930ஹு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். "**சாமளநாதன்**" சென்ற வாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 **அணு** கூடச் சேர்த்து ரூ. 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. **பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாதமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணு ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் ஐந்து **சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

ஸாரமதி

8 JUL 1931

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம்:
"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தோடித்தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] 1931

8 JUL 1981

ஸ்ரீ

ஸாரமதி

வாணி துதி.

வெண்மைத் துகிலுடுத்து வீணையைக் கரத்தேந்தி
பண்புடன் விளங்கும் பசுங்கிளியே! பெண்ணரசே!
கண்ணின்; மணியே! கற்பகமே! கனித்தருள வாராய்!
விண்மணியே! வித்தகியே கா!

விநாயகர் துதி.

சந்திலும் பொந்திலும் அந்தமாய் விளங்கும்
தந்திமுகவனே! நந்தமை வந்து காப்பாய்!

210030

1-வது அதிகாரம்

பந்தயத் தடபுடல் சிந்தையின் துயரம்.

"கமலாரஞ்சி! வாழைப்பழம்! சாத்துக்குடி! மசால் வடை, முறுக்கு, போண்டா, பஜ்ஜி, கரம் காப்பி, பால் காப்பி, வெற்றிலைப்பாக்கு, பீடி, சிகரெட், சோடா, லெமனேட், ரேஸ் கைடு (Race guide) ரேஸ் கைடு சார்! ஹிந்து, சுயராஜ்யா, சுதேசமித்திரன் வீக்லி" என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தத்தம் போக்காக விற்றுக்கொண்டே சுமார் பகல் ஒரு மணிக்குச் சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் அலைகின்றார்கள்.

சில கடிதங்களை ஆவலுடன் அன்பினால் இரு முறை படிக்கத் தூண்டுகிறது. சில கடிதங்களை நன்றாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு இரு முறை படிக்க நேருகிறது; பின்னும் சில கடிதங்கள் ஒரு முறை படிப்பதற்கும் வெறுப்பைத் தருகின்றன.

அந்த ஸ்டேஷனில் எண்ணிக்கையற்ற ஜனங்கள் புகைத்தொடரின் வரவை எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கூட்டம் கூட்டமாக ஜனங்கள் நின்றுகொண்டு 'ரேஸ்' விவரங்களை அறிவிக்கும் புத்தகத்தைப் பார்த்து "அந்த 'ஜாகி' முதலில் ஜயிக்கும்; இந்த ஜாகி முதல்தரமானது; அதில் போட்டால் பணம் நிரம்ப வாரிவிடலாம்" என்று பேசிக்கொண்டு நிற்கின்றார்கள். பணத்தைச் செலவிடுவதற்கு முன்னர், பணத்தை வாரிக்கொள்வதிலேயே நாட்டம். பணத்தைத் தோற்றுவிட்டு வாடித்தொங்கும் வதனத்துடன் வீடு திரும்பும்போதுள்ள சங்கடம் அப்பந்தயப்போட்டியில் பிரவேசிக்குமுன் தெரிகின்றதா! ஒவ்வொருவருடைய கையிலும் இந்த ரேஸ் விவர புத்தகம் ஒவ்வொன்று. வாயில் அந்த விஷயமான பேச்சே பெருமிதமாக விருக்கின்றது. தமது கைப்பணத்தையே செலவிடும் மைனர் பிரபுக்கள் சிலர்; தாம் ஒரு சல்லியும் செலவிடாது தம்மை நம்பிய சிநேகிதரின் மனதைக் கலைத்துத் தூபம் போட்டுப் பணத்தைக் கறக்கச் செய்து அதைக் கட்டி அதில் வரும் லாபத்திற்கு மட்டும் தாம் பங்காளியாக விருந்து அடித்துக்கொண்டு போகும் சுயநலப் புலிகள் சிலர்; தன் கையில் பணமில்லையேல் 100-க்கு 5 வட்டி விதம் மார்வாடிக் கடையில் கடனாகிலும் வாங்கியோ, அன்றிப் பெண்டாட்டியின் நகையை விற்றோ, அடகு வைத்தோ பணம் பெற்று, அந்தக் குதிரைப் பந்தயத்தில் தோற்று விட்டுத் தலை மீது கையை வைத்துக்கொண்டு திரும்பும் உதார பிரபுக்கள் சிலர்; கையில் பணமில்லாமலேயே, குதிரைப் பந்தயத்தில் அதிக ஆசையுள்ள மனிதன் அந்த வலையில் விழுந்து விட்டான் என்பதைத் தெரிந்துகொண்ட சில துஷ்டர்கள்—அதற்கென்றே காத்துக்கொண்டிருக்கும் பக்காப் பேர்வழிகள்-தாமே வலுவிற்சென்று பணமற்றுத் திண்டாடும் பிணத்திற்குத் தேறுதலும் தைரிய மொழியும் கூறித் தாமே கடன் கொடுப்பதாகக் கூறி, அவர்களிடம் சரிக்குச் சரியான வட்டிக்குப் பணங் கொடுப்பதாக எழுதி

சில பெண்கள் தாம் நன்றாக சங்கீதம் பாடுகிறோம் என்று கர்வம் அடைவதோடு பல பெண்கள் மத்தியில் பாடும்போது தங்கள் பாடும் சக்தியை அடக்கிக் கொண்டு விடுகிறார்கள். ஆடவர்களின் முன்னிலையிலோ தங்கள் திறமை யெல்லாங் காட்டி ஆடம்பரமாகப் பாடுகின்றார்கள்.

வாங்கிக்கொண்டு, பணத்தைக் கொடுத்து லாபம் வந்தால் அதில் தனக்குப் பாதி உண்டென்றும், வராவிடில் வட்டியுடன் கடனைக் கொடுத்தால் போதுமென்றும் கூறியனுப்பும் தரகுக்காரக் கொள்ளிக் கட்டைகள் சிலர்; குதிரைப் பந்தயத்தில் பேராசைகொண்டு வீட்டில் சம்சாரத்தையே கவனியாமல் மக்கள் மனைவியை மனங்கலங்கச் செய்துத் தான் சம்பாதிக்கும் பொருளைத் தினந்தோறும் குதிரைப் பந்தயத்தில் தோற்றுவிடுவதோடு கையில் பணமில்லாத அன்று மனைவியை ஹிம்சித்து அவளிடமுள்ள தாலி உருவம் முதலியவற்றையும் அபகரித்துக் கொண்டு வீட்டிலுள்ள தண்ணீர்ப் பாத்திரம் முதல் அடகு வைத்துப் பணம் வாங்கி, அதன் மூலம் வீட்டில் சண்டையுடன் அந்தப் பணத்தையும் கட்டி ஏமார்ந்த மதிகெட்ட மிருகங்கள் சிலர்; வீட்டிலும் ஒன்றும் கிடைக்காவிடின் அடியும் குத்தும் கொலையும் களவும் செய்து விட்டுக் குதிரைப் பந்தயத்திற்குக் குதிர் போன்று வந்து நிற்கும் குண்டுணிப் பிரபுக்கள் சிலர். இந்த அற்புதமான மனிதர்களையும், அவர்களின் பேச்சுக்களையும், செய்கைகளையும் பார்ப்பதற்காகவே வந்து காத்துக் கொண்டிருக்கும் குறும்பர்கள் சிலர்.

இத்தனை கனவான்களும் ஒன்றுகூடிப் பேசும் ஆரவாரத்தைக் கேட்கவும் வேண்டுமா? சாதாரணமாக ஊருக்குப்போகும் ஜனங்களின் களியாட்டங்களும் பேரிரைச்சலும் செவியைச் செவிடுபடச் செய்கின்றன. 'கிண்டி ரேஸ்' எல்லோருடைய பணத்தையும் தண்டிக் கொண்டு அவர்களை நொடியில் பாழாக்கி விடும் மாயஜாலமென்பதை அறியாத மைனர்களின் துள்ளலுக்கும் எல்லை இல்லை. இத்தகைய பெரும் ஜனத்திரளின் மத்தியில் ஒரு பக்கத்தில் வெகு ஆடம்பரமாக உடையணிந்து, புது மாப்பிள்ளைபோல் நிற்கும் ஒரு யௌவன புருடனைச் சுற்றி நான்கு சகபாடிகள் நின்றுகொண்டு சம்பாஷிக்கலானார்கள்.

பகவத் சன்னிதானத்திற்கு எந்தெந்த நேரத்திற் சென்று தரிசனம் செய்தாலும் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு அழகுடன் பகவான் தரிசனம் தருகின்றார். ஆனந்த சொரூபனை அகமகிழ்ந்து தரிசனம் செய்யும் பாக்கியம் எல்லோருக்குமே கிட்டி விடாதாம்,

சேஷன்:—ஏனடா நாகசாமி! எந்த நேரத்திலும் எந்த விஷயத்திலும் வெகு சுருசுருப்புடன் சமாளிக்கும் சாமர்த்தியம் உன்னிடத்தில் தான் இருக்கிறது. இந்த நூறு ரூபாயை எவ்விதம் சேகரித்தாய்?

சுப்பன்:—அடடா! அவனுக்கென்ன குறைவு! மனம் வைத்தால் இந்த க்ஷணத்தில் இன்னும் ஒரு நூறு ரூபாய்கூட கொண்டு வரும் சாமர்த்தியம் அவனுக்கு உண்டு. காரியம் பெரிதா வீரியம் பெரிதா! நாகசாமியின் புத்திசாலித்தனத்தை இன்றுதான் கண்டோமா என்ன!

குப்பன்:—இன்று புதிதாகக் கண்டால் கூட அவனுடைய தீரத்தை யாவரும் ஒரு நொடியில் தெரிந்து கொள்வார்கள். எனக்கு நாகசாமியின் பராக்கிரமம் வெகு நாளைக்கு முன்பே தெரியும். அதாவது முன்பொருசமயம் நினைத்த க்ஷணத்தில் பணத்தைக் கொணர்ந்து எனக்கு வந்த வாரண்டை அவன் விலக்கவில்லையா? அன்று முதலே நான் நாகசாமியின் சாமர்த்தியத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

அப்பு:—ஆம்! ஆம்! அவனுடைய ஒவ்வொரு குணமும் மிகவும் வியக்கத்தக்கது. நாகசாமி தன் சொந்த மனிதர்களையெல்லாம்விட நம்மீது அதிக பாசத்தைக் காட்டும் உத்தம குணம் எத்தனை அழகு! அவனுடைய மனைவிக்கும் மைத்துனனுக்கும் மட்டும் இவன்மீது சற்று ஆத்திரமேயன்றி, மற்ற அறிவுடைய எவரும் இவனிடம் அத்தியந்த பிரியத்துடனேயே இருக்கிறார்கள்.

நாகசாமி:—என்னடா! அந்தப் பீடைகளின் மிரட்டலுக்கு யாரேனும் பயப்படுகின்றார்களா? என்னுடைய மதிப்பும் கௌரவமும் இன்னதென்று அவர்கள் அறியவில்லை. அதை அறிந்தோருக்கல்லவா அந்த அருமை தெரியும்! அது கிடக்கட்டும். இன்று

சகோதரர்களைப் போன்று சிலரை பாவிப்பதும், பிதாவாகச் சிலரைப் பாவிப்பதும், ஏனோ தானோவென்று சிலரிடம் நடப்பதும் தான் உலக இயற்கையாகும். எல்லோருக்கும் ஒரேவித மரியாதை கிடையாதாம்-

இந்தக் குதிரையின்பேரில் கட்டினால் கட்டாயம் நாம் ஜயம் பெற லாம். மொத்தத் தொகை 250 ரூபாய் இருக்கிறது. இதைக் கொண்டு இன்று ஒருகை பார்த்துவிடுவோம்.

குப்பன்:—நேற்று பணமில்லை என்று தவித்தாயே; இன்று திடீரென்று எவ்விதம் சேகரித்தாய்? உன் சாமர்த்தியமே சாமர்த்தி யம் அப்பா!

நாகசாமி:—"பணத்திற்கு என்னடா பஞ்சம்! இன்று அகஸ் மாத்தாக என் மனைவியின் பெட்டியைத் திறந்தேன். அதில் ஒரு காசுமாலை இருந்தது. அது சுமார் 500 ரூபாய் பெறும். அதை அப்படியே எடுத்துக்கொண்டுபோய் மார்வாடியிடம் 300 ரூபாய்க்கு விற்றேன். 50 ரூபாய் கையிருப்பு வைத்துக்கொண்டு 250 ரூபாய் கொண்டுவந்திருக்கிறேன். வண்டி வருவதற்கு இன்னும் 10 நிமிஷம் இருக்கிறது. அதற்குள் ஒரு சீட்டாட்டம் போடலாமா?" என்றான். அதை மற்றவர்கள் ஆமோதித்ததும் உடனே ஆட உட்கார்ந்தார்கள்.

இது போன்று இன்னும் அநேகர் குதிரைப் பந்தயத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொன்றையும் விவரித்து எழுதுவதென்றால் அவ் விஷயங்களே ஒரு தனித்த புத்தகமாகி விடும். வைப்பாட்டிகளுடன் உல்லாசமாகப் பணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டுள்ள பிரபுக்கள் அங்கொரு பக்கத்தில் உட் கார்ந்து சாவதானமாயும் கொஞ்சிக் குலாவியும் பேசிக் கொண்டிருக் கும் காட்சியொரு விநோதம். சமீபத்திலுள்ள காஞ்சீபுரம் முதலிய ஊர்களில் நடக்கும் உத்லவங்களுக்குச் செல்லும் பாட்டிமார்களின் கூட்டமும் மடிசஞ்சி மூட்டையும், கால் நீட்டிப் பேசும் வாட்டமும், ஒரு வேடிக்கை. மாமியார் வீடு செல்வதற்கு அழும் பெண்களைத் தாய்மார்கள் வீட்டாரும் மாமி வீட்டாரும் சமாதானம் செய்து நற்

பெற்றோருக்கும் கொண்ட · கணவனுக்கும் அடங்காத பிடாரிக் குணமுடைய சில துஷ்டப் பெண்களின் தூர்த்தச் செய்கையையும் மூர்க்க குணத்தையும் கண்ட யாருக்கும் அவர்களிடம் தீராத வெறுப்பு தானே உண் டாகி விடுகிறது. இத்தகைய ஜன்மமும் ஓர் ஜன்மமா?

புத்தி மதிகள் கூறியபடியே பிரிவின் பொருட்டு அவர்களும் கூட கண்ணீர் விட்டுக் கொண்டும், கண்களைத் துடைத்துக் கொண்டும் இருக்கும் உருக்கமான காட்சி மற்றொரு புறம். பிச்சைக்காரர்களின் கூட்டமும் அவர்கள் பாடிக் கொண்டு பிச்சை வாங்குவதும் ஒரு தமாஷ். போர்ட்டர்கள் மூட்டைகளைத் தூக்கப் போட்டி போட்டு திடீரென்று எடுத்துக் கொண்டு ஓடுவது ஒரு ஆச்சரியம். முதல் வகுப்பு இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் 'வெயிடிங்கு ரூமில்' (Waiting room) உல்லாசமாக உட்கார்ந்து உரையாடுவதும், அன்யோன்யமான தம்பதிகள், பழம் பிஸ்கேட் முதலியன வாங்கிச் சந்தோஷமாகத் தின்று மகிழ்வதுமான காட்சி ஒரு புறமும் காண்போர்க்கு ஆநந்தத்தை விளைக்கின்றது.

* * * * * *

நாகசாமியின் மனைவியாகிய ஸாவித்திரி என்பவள் இயற்கையழகும், நற்குணமும் நல்லொழுக்கமும், பெருந்தன்மையான போக்கும், பதியிடத்தில் அவன் தறிதலையாக விருப்பினும் பாசமும், தெய்வ பக்தியும் வெகுவாய் வைத்த உத்தமி. அந்த மின்னளுக்குச் சற்றேறக்குறைய 20-வயதிற்கு மேலிருக்கா தெனலாம். அவளுடைய சகலமான அம்சங்களுக்கும் நேர்மாருக அவளுடைய கணவன் தறிதலையாயும், வீடு தங்காத நாடோடியாயும் துஷ்டர்களின் சகவாசமும் வேசையர் உறவும் கொண்டு அலைகின்ருன். அந்த மகா மானவதியாகிய நங்கை, இத்தகைய துஷ்டகணவனிடத்திலும் முகங் கோணது ;வெகுவாகப் பணிவுடன் நடக்கின்ருள். அவளுடைய தாயார் வீடும் சென்னையிலேயே இருக்கிறதாகையினல், கணவன் வீட்டில் தங்காத இரவுகளில் தன் தாய் வீட்டிற்குச் சென்று படுத்து, விடிந்ததும் தன் மனைக்குத் திரும்புவாள். அவளுடன்

"பிசாசு பிடித்திருக்கிறதோ! மூளையே கலங்கி விட்டதோ! பிடிவாதமான மண்டைத் திமிரோ!" என்று ஐயுறும்படியான செய்கையைச் சில பெண்கள் செய்து விடுவதும், அந்தச் செய்கையினல் வாங்கிக் கொள்ளும் அடியைக் கண்டால் பார்ப்பவர்களின் மனம் பதறி விடுகின்றது. அடி வாங்கும் மூர்க்க மூடத்திற்கோ அது சற்றும் உறைப்பதே இல்லை. பின்னும் பின்னும், அந்தச்செய்கையையே அவர்கள் செய்கிருர்கள்.

பிறந்த சகோதரன் மதனகோபாலன் என்பவனும், சகோதரி ரங்கமணி என்பவளும் சென்னையிலேயே இருக்கிறார்கள். ரங்கமணியும், ஸாவித்திரியும் இரட்டையாகப் பிறந்தவர்களாகையினால், அவர்கள் சகல விதத்திலும் ஒருவரோடொருவர் ஒத்திருந்தார்கள். மதனகோபாலன் இவ்விரு சகோதரிகளின் மீதும் அத்யந்த பிரியம் உடையவன். அவர்களைச் சற்றும் கடிந்து கொள்ளாது மிக்க அன்புடன் நடத்துவான். அவர்களின் தாய் தந்தையர் இம்மூவரையும் பிரியத்துடன் வளர்த்து வந்ததோடு, மதனகோபாலனுக்கு அவன் விரும்பியவரையில் கல்வியும் கற்பித்தார்கள். அவனே அவ்விரு நங்கைநல்லார்க்கும் மூத்தவனாகையினால் அவ்விரு பெண்களுக்கும் அவனுக்கும் சுமார் ஏழெட்டு வயது வித்தியாசமுண்டு. மதனகோபாலனுக்குப் படிப்பு பூர்த்தியானதும், தக்கவிடத்தில் அவன் விரும்பிய வனிதையை மணம் செய்வித்தார்கள். சதியாக வந்த அவ்விளங்கொடியாள் மரத்தைத் தழுவி நிற்கும் மலர்க்கொடிபோலவே மதனகோபாலனைப் பலவிதத்திலும் ஒரு கொடிபோன்று தழுவி, அவனை அப்படியே தன் அன்புக்கு அடிமையாக்கிவிட்டாள். மதனகோபாலனுடைய மனம் முற்றும் பானுமதி என்கிற அம்மின்னாளிடமே ஐக்கியமாகிவிட்டதால் அவர்களிருவரும் ஒருபிரும் ஈருடலுமாக இருந்தார்கள். அத்தம்பதிகளின் காதல் திறத்தையும் கனிந்த அன்பையும் கண்டு வியந்து போற்றாதார் கிடையாது. எந்த சமயத்திலும் எந்த நேரத்திலும் அவ்விருவரையும் அன்றில் பறவைகளைப்போன்று பார்க்கலாகுமேயன்றித் தனித்துப் பார்ப்பதற்கு முடியாது. 'அவளன்றி இவனில்; இவனன்றி அவளில்' என்று கூறும்படி எல்லா அம்சங்களிலும் பொருத்தமாக இருந்தார்கள். அவர்கள் சரசமாகப் பேசி மகிழும் ஆநந்தத்தைக் கண்டு களிக்கும் பொருட்டு அநேகர் மறைந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

சுயநலப் புலிகள் செய்கை அவர்களுக்கே சில சமயம் துன்பமாக முடிகிறது. இரு பக்கமும் தாளம் போட்டுத் தலை யாட்டும் பேர் வழிகள் எந்த வகையிலும் பட்டுக் கொள்ளாது விலகிக் கொள்கிறார்கள்; தீமூட்டி மிடத்தில் நன்றாக மூட்டி விட்டு வேடிக்கையும் பார்ப்பார்கள்.

அத்தகைய தம்பதிகளின் மனோகரமான—இன்பகரமான, அன்புமயமான—வாழ்க்கையை ஈசன் என்றும் அவர்களுக்கு நிலைத்து அளிக்காமல் பானுமதியின் ஸௌந்தர்ய ரூபலாவண்ய சுகுணத்தை மெச்சி அவளை அவள் கணவனிடத்திலிருந்து இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளாகவே பிரித்துத் தம்மிடம் சேர்த்துக் கொண்டு விட்டார். அந்தோ! சதியை இழந்த பதியின் மனத் தவிப்பையும் பிரிவாற்றாத் துயரத்தையும் அபாரமான துக்கத்தையும், சகிக்கக் கூடாத சோகத்தையும் இன்னவிதமென்று கூறவும் வேண்டுமோ? பானுமதியுடனேயே தன்னுயிரை மாய்த்துக் கொள்ளப் பலவிதத்திலும் துணிந்தான். பானுமதியின் சவத்தையும் விடமாட்டேனென்று அதன்மேல் விழுந்து புறண்டு கதறினான்; பித்தம் பிடித்தவன் போலப் பிதற்றலானான். பத்துப் பேர்கள் சேர்ந்து இழுத்தும் அசையாது பிணத்தின்மீது பிணமாக விழுந்து விட்டான். "ஐயோ! என் கண்ணே! பானுமதி! என்னைவிட்டு நீ எங்குச் சென்றாய்? உன் பிரிவை நான் எங்ஙனம் சகிப்பேன்? உனது அன்பான சிறைபி லடிமையாகக் கிடக்கும் என்னைத் தனியே விட்டுச் செல்ல நீ எவ்விதம் துணிந்து விட்டாய். என் கண்மணி! என் காதற் கிளியே! ஐயோ! இதற்கோ நமக்குள் இத்தகைய பாழும் அன்பு ஓங்கி வளர்ந்தது! உன்னை இவ்விதம் பிரிந்திருக்கப் போவதைக் கனவிலும் கருதவில்லையே யான்; என் பாபமே உன்னை இவ்விதம் கொன்றதோ? என் செய்வேன்; உன் செங்கனிவாயின் அமுதம் போன்ற மொழியை இனி யான் என்று கேட்பேன்? என்று அந்த ஆநந்தத்தை மீண்டும் பெறுவேன்? என் தங்கமே! என் காதலி! நான் எந்தெந்த நேரம் என்னென்ன விரும்புகின்றேனோ அவ்வப்போது அவைகளை எனக்கு அன்புடன் முகமலர்ந்து அளித்து இன்புறச் செய்யும் கற்பகத் தருவே! என் மனதிற்குச் சிறிதும் சஞ்சல மென்பதே—வருத்தமென்பதே, தெரியாதிருக்கும்

அன்பும், நன் மதிப்பும் பொருந்திய மனிதரிட மிருந்து கடிதம் வந்தால் மனங் களிக்கின்றது. அக் கடிதத்தில் பழய அமுது இடினும் பிரியத்துடன் புசிப்பதாகக் கண்டிருப்பதை நோக்கியதும் அன்பின் முதிர்ச்சியினால் "நாம் ஏன் ஒரு தாயின் மக்களாகப் பிறக்க வில்லை" யென்று மனம் ஏங்குகின்றது.

படியாக சதா அன்பு மயமாக வசன அமுதமளித்து என் மனதை மகிழ்வித்த அமிர்த கலசமே! எத்தகைய துக்க மிருப்பினும் கணத்தில் ஆற்றிவிடும் ஆற்றல் பெற்ற சக்திவடிவே! இரவு முற்றும் கண் விழிப்பினும் சிறிதும் சிரம மென்பதே தோன்றாமலிருக்கும்படியாக உபசரிக்கும் உத்தமக் களஞ்சியமே! என் மனதைக் கொள்ளை கொண்ட கோகில கான சுந்தரீ! அனவரதமும் என்னை விட்டு அகலாது, ஆநந்த விருந்தளித்து என்னை மகிழ்வித்த மனமோகன சின்னார வடிவழகி! பிச்சை ஏற்பாருக்கு நான் ஒரு சமயம் கடிந்து 'இல்லை' என்று கூறிய போதும் "நாதா! அவ்வாறு கூறாதீர்கள். மனித ஜன்மம் எடுத்து நாம் பூமியில் வந்தபோது கொண்டு வந்தது ஒன்று மில்லை; போகும் போது கொண்டு போவ தொன்றுமில்லை. பாவம், புண்ணியம் இவ்விரண்டுமே தான் நம்மை யறியாது நம்முடன் பின்பற்றி வரும். ஆகையினால் ஏற்போருக்கில்லை என்பதைவிட தோஷம் வேறு எதுவுமே இல்லை. நாம் தினம் ஒரு வினாடியும் வயிறு வாடாமல் உண்டு மகிழ்வதால் பசிப் பிணியின் உபாதியை நாம் அறிகிலோம். அந்தக் கஷ்டத்தை நாம் அறிந்திருக்கும் பக்ஷத்தில் இப்படிச் சொல்லுவோமா? ஒருபோதும் சொல்ல மாட்டோம். பாழும் உதர போஷணார்த்தம் இத்தகைய பாடு பட்டு இரக்கும் அவ் வயிற்றைக் காக்க வேண்டி இருக்கிறது. உங்கள் கையில் கிடைத்த காலணாவோ தம்பிடியோ கொடுத்தனுப்புங்கள். இல்லை என்னும் சொல்லை இனி விடுங்கள்" என்று வெகு இனிமையாயும் என் புத்தியில் படும்படியாயும் எனக்கு எடுத்துரைத்த காருண்ய குணம் பொருந்திய கண்மணீ! உன்னுடன் வெகு சந்தோஷமாக இருக்கையில் என்னை என் பெற்றோர் அழைத்தால், நான் செல்லாது 'சிள்' ளென்று விழுந்ததற்கு" நாதா! என்னை விட்டுப் பிரியும் பொருட்டு உண்டாகும் விசனத்தினால் இவ்விதம் பெரியோரைச் சிடு சிடுத்துப் பேசலாகுமா? இது எத்தகைய கொடிய பாபம்! நான் எங்கே போய் விடுவேன். எப்போதுந்தான் நான் உங்களருகிலேயே இருக்

வயதில் பெரியவர்களாகச் சிலர் காணப்படினும் அவர்களுடைய அறிவில்லாத்தன்மையினாலும், மூர்க்க குணத்தினாலும் அவர்களை யாரும் லக்ஷியம் செய்வதில்லை. அறிவு வளரும் இடத்தில் சிறியவர்கள் பெரியவர்கள் என்கிற வித்தியாஸம் காணப்படுவதே இல்லை.

இன்றேனே; பெரியவர்கள் அப்படி இருக்கிறார்களா? அழைக்கும் போதேனும் பதில் பேச வேண்டாமா? கேவலம் நான் இப்போது சமீபத்தில் வந்தவள். அவர்களோ உங்களைத் தம் உதரத்தில் தாங்கி, உதரத்தில் பங்கு கொடுத்து ஈன்று, அரும் பாடுபட்டு வளர்த்த தெய்வங்கள். நாதா அவர்களிடத்தில் தான் நீங்கள் முதலில் அன்பாக இருக்க வேண்டும். உடனே சென்று வாருங்கள்" என்று, பிரேமமாயும், உருக்கமாயும் கூறி என்னை யனுப்பிய எழிலார் அமுதமே! நீ ஒவ்வொரு விஷயத்திற்கும், ஒவ்வொரு நிமிஷத்திற்கும் எனக்கு,

"அன்னை தயையும்; அடியார் பணியும்; மலர்ப்
பொன்னின் அழகும்; புவிப் பொறையும்—வன்னகளையும்;
வேசி துயிலும்; விறன் மந்திரி மதியும்,
பேசிலிவை யுடையாள் பெண்".

என்ற பாடலின் கருத்துப் படிக்கு ஒரு சமயம் அன்னையாயும், எழிலில் சிதேவி போன்று மறுசமயமும், எத்தனை கஷ்டங்கள் நேரிடினும் பூமிதேவி போன்று பொறுமையுடன் வகித்து, என்னையும் வகிக்கச் செய்வாயே! வாணியின் அருள் பிரஸாதமாகிய கல்வியும் சங்கீதமும் அபரிமிதமாகப் பெற்றிருந்த என் கண்ணே! எனக்கின்ப மூட்டும் விஷயத்தில் என்னிடத்தில் நீ காட்டிய தாஸ்ய பாவத்தையும், மனப் பூர்வமான அன்பையும், என்னென்பேன்? அம்மட்டுமோ! எனக்கு நீ ஓர் புத்தி வலிமை யுடைய மந்திரி போன்று பல முறையும் நன்மதி புகட்டி எனக்கு அறிவை ஊட்டிய அழகை—அருமையை—ஐயோ! இனி எக்காலத்திலடைவேன்? என் கனி ரசமே! கரும்பின் சுவையே! நான் உன்னைப் பிரிந்து படும் துக்கத்தை—பிரிவாற்றாத் துயரத்தை—எண்ணி அழுவேனோ! உன்னால்

நாம் வெகு சகஜமாக எண்ணி இருக்கும் மனிதராயினும் அவர்களுக்கு இயல்பாயுள்ள புனை சுருட்டு சற்றும் நீங்காமல் "சாப்பிடாமலும் சகஜ பாவ மில்லாமலும் இருக்கிறார்கள். "அதனால் தான் வரவில்லை" என்று வித்தியாசமாகக் கூறுகிறார்கள். அவர்களுக்காக நேரா நேரம் சாப்பாட்டை வைத்துக் கொண்டுக் காத்திருந்ததை அறிந்த பின்னர் 'நான் அவ்விதம் நினைத்தது தவறு தான்' என்கிறார்கள். இதில் என்ன உபயோகம்?

நான் அடைந்த ஒவ்வொரு இன்பத்தையும்—நல் மதியையும்—எண்ணிப் புலம்புவேனோ! மானிட ஜன்மம் சதமன்று; என்றைக்கேனும் ஒரு நாள் அழிவது நிச்சயம் என்று நீ அடிக்கடி தெரிவிப்பாயே! ஐயோ! அந்தச் சொல்லை உலக வழக்கிலுள்ள பழமொழியாகக் கூறுகிறாயென்று நினைத்தேனே! என் தலைக்கே என்னுயிருக்கே என் கடனிற்கே வந்துவிட்டதே! உன் முடிவை அறிந்துதான் அவ்வாறு கூறினாயா! என் இன்பவல்லீ! பானுமதி! என்ன அழகான பெயர் பானு, சூரியன். சூரியன் உலகத்திற்கு எத்தகைய நன்மையைச் செய்கிறானோ அதே போல நீ எனக்கும், என் குலத்திற்குமே நன்மையைச் செய்து பிரகாசமுடனிருந்து வந்தாயே! அதற்கடுத்த மதி என்பது சந்திரன் என்று ஒரு பொருளும், மதி--புத்தி என்று ஒரு பொருளும் உடையதல்லவா! அவ்விரண்டிற்கும் ஒத்தவாறு குளிர்ந்த கிரணத்தையுடைய சந்திரன் போன்று என்னை மகிழ்வித்து, நன்மதியும் போதிக்கும் என் நவரத்தினமணியே! சந்திர சூரியர் ஒழிந்துவிடில் உலகில் வாழ்வது எப்படி? அதேபோல நீயில்லாது நான் எப்படி வாழ்வேன்? ஐயோ! இனி உன்னை எக்காலத்தில் கண்டு என் துயர் தீருவேன்? என்னைக் கடவுள் இவ்வளவு சீக்கிரத்தில் பிரித்துவிடுவார் என்று தெரியாமல் மோசம் போய்விட்டேனே! என் கண்மணி! உயிர் போகும்போதுகூட என்னை நோக்கி "நாதா! என்னோடு பிரபஞ்சம் முழுகிவிடவில்லை. மறுமணம் செய்துகொண்டால் என்னைவிட மேலான புனிதவதி தமக்குக் கிடைப்பாள். மணம் செய்துகொள்ளுங்கள். ஸாவித்திரி, ரங்கமணி இருவரையும் பார்த்துக்கொள்ளுங்கள். பெற்றோரை அலக்ஷியம் செய்யாதீர்கள். எனக்குப் பிராப்தம் இவ்வளவுதான். நான் மகா பாவி

ஒரு காலக்ஷேபத்திற்கோ கச்சேரிக்கோ சென்றால் கதை செய்பவர்களும் பாடகர்களும் வரும் வரையில் அத்தனை ஜனங்களும் அவர்கள் வரும் வழியையே நோக்கிக் கழுத்தும் வலி எடுத்து விடும்படி பார்க்கிறார்கள். அத்தனை நேரம் பார்த்த சிரமம் தீர வந்த பாகவதர்கள் செவிக்கு ஆநந்த மளித்தால் சந்தோஷமாக இருக்கிறது. அபச்வரமும் ருசியற்ற தன்மையாய் வெறுப்பை உண்டாக்கிவிடிலோ ஆத்திரமே உண்டாகி விடுகிறது. கொடுத்த காசு வீண் வம்புவரி என்றும் சிலர் திட்டுகிறார்கள்.

யாகையினுல் தங்களைப் பிரிந்து செல்கிறேன், விசனிக்காதீர்கள்'' என்று கல்லுரை கூறிச் சென்ற சாரீமணீ! ஹா! இனி நான் மறுமணம் செய்துகொள்வதா! சிச்சி! இந்த ஜன்மத்தில் இல்லை. இனி அவ்வாசை யாரும் கொள்ளல் வேண்டாம். என் கண்மணியை —தங்கக் கிளியை—தணலாக்கிய பிறகு இனிமேல் பெண்கொண்டு களிப்பதா? என் அன்பின் ஆலயம் இடிந்துவிட்டது. இனி நான் ஆலயமற்ற—தங்கவிடமற்ற—காட்டு வாசியாகி விட்டேன். சுவர்ண பிம்பத்தை இழந்த அன்றே என் வாழ்நாள் முடிந்தது. என் பிறவியே பாழாகியது. இனி நான் சந்நியாசிதான். என் கண் மணியே உயிர்பெற்ருல் நான் மணப்பேன். இல்லையேல் வேறு வழி இல்லை. பானுமதீ! நீ இனி வந்து என்னை மகிழச் செய்வாயா? என்னைத் தேற்றுவாயா ஹா! நான் என்ன செய்வேன்? இனி எங்குப்வேன்? என் கண்ணாமுதை எங்குக் காண்பேன்? ஐயோ! கடவுளே! இவ்விதமும் என்னைப் பரிசோதிக்க எத்தனை நாளாகக் குறி வைத்துக்கொண்டிருந்தாய்? ஆ! பானுமதீ! பானுமதீ! பதில் பேசாது படுத்திருக்கிருயே! உன் செவியில் நான் அழைப்பது கேட்கவில்லையா! நான் ஒருதரம் 'பானு' என்பதற்குள் வேகமாக ஓடிவந்துவிடுவாயே! என் கண்மணீ! நான் இத்தனை நேரம் உன்மீது விழுந்து கதறுகிறேனே! உன் செவி என்ன செவிடாயதா! எழுந்திரு என் கண்மணீ! எழுந்திரு; எழுந்தெனக்கோர் முத்தங்கொடு. இன்ப மயமான விழியால் என்னை நோக்கு; அமிர்த மயமான வாயினுல் நாதா என்று கூப்பிடு; சற்று;இப்படிப் பார். பானுமதீ! என் கண் ணல்லவா! என் கனியல்லவா! என் காதற் கிளியல்லவா! என் ஆசந்த பொக்கிஷமல்லவா! என் இன்பவாரிதி யல்லவா! என் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்ருய்? கண்ணைத்திற. கண்மணீ! கண்ணைத்திற; என் முகத்தைப் பார்; என்னுருயிரே! என்னுரா வமுதே! ஐயோ! நீ உயிரற்ற பிணமாகவா கிடக்கிருய்? என்னேடு

முக்கோடி ஏகாதசி போன்ற புண்ணிய தினத்தில் 100க்கு 99 பேர்கள் பிராமணரல்லாதாரின் கூட்டம் நிறைந்து காண்கிறது. சில நாஸ்திகர் எங்கும் நாஸ்திகக் கொள்கை விருத்தியாகிவிட்டதாகக் கூறுகிருர்கள். இந்த பெருங் கூட்டத்தைக் கவனித்தால் நாஸ்திகம் எங்கிருக்கிறதென்று தேடும்படியா கிறது.

பேசமாட்டாயா! என்ன விது! ஹா இது பூமியா? ஆகாயமா? நான் எங்கே? என் கண்மணி எங்கே? என் காதலி எங்கே? என் தீங்கனி எங்கே! என் இன்சுவை எங்கே!" என்று தாறுமாறாகப் பிதற்றிப் பிணத்தை விடாது பற்றிக்கொண்டான். முகத்தோடு முகம் பதித்துக்கொண்டு கதறுகின்றான். இந்தக் கோரமான காட்சியைக் கண்ட எல்லோரும் தாங்க வியலாது தபிக்கின்றார்கள். கண்ணீர் பெருகி வழிகின்றது. மதனகோபாலனுடைய உயிர்த் தோழர்களில் சிலர் தம்மைத் தாம் தேற்றிக்கொண்டு மதன கோபாலனுக்கு பற்பல ஆறுதல் மொழிகளைக் கூறி அவனை பலாத்காரமாகச் சவத்தினிடத்திலிருந்து இழுத்து அப்புறப் படுத்தினார்கள். பிறகு நடக்கவேண்டிய கருமங்கள் யாவும் நடந்தன.

* * * *

மேற்குறித்த விஷயங்கள் நடந்து தற்காலம் நமது கதை ஆரம்பமாவதற்கு முன்னர் நான்கு வருடமாயின. மதனகோபாலன் பானுமதியை இழந்த அன்று முதல் தீவிர வைராக்ய சிகாமணி யானான். அவன் பெற்றோரும், மற்றோரும், சகோதரிகளும் அவனை விவாகம் செய்துகொள்ளவேண்டிச் செய்த பிரயத்தனங்கள் யாவும் கடலிற் கரைத்த கற்கண்டே போலாயிற்று. அனுவசியமான துர் மரணத்தினால் உயிர் நீத்துக்கொண்டாலும் பிசாசமாய்த் திரிந்து அல்லற்பட நேரும்; ஆகையினால்தான் இனி திடமான வைராக்கியத்துடன் தன் ஆயுள்கால பரியந்தம் பிறருக்கு உதவி புரியும் புண்ணியத் தொழிலையே மேற்கொண்டு செய்வதென்று தீர்மானித்து விட்டான். தான் ஏற்கனவே பொலீஸ் இன்ஸ்பெக்டர் வேலை பார்த்துக் கொண்டிருந்ததை 'ராஜிநாமா' செய்துவிட்டு உலக பிரக்யாதி பெற்றுள்ள மகா உபகாரியான துப்பறியும் **ராஜாராம் நாயுடு**வினிடத்தில் பக்தியுடன் ஒத்துழைக்கும் உண்மை நண்ப

தபாற்காரனின் வருகையை எதிர்பார்த்து ஆவலாக நிற்கையில் அவன் உபயோகமற்ற விளம்பரப் புத்தகங்களும், மாதிரி பிரதியனுப்பும்படி வரைந்துள்ள கடிதங்களும், ஏன் இன்னும் பத்திரிகை வரவில்லை என்று வினவும் கடிதங்களும் கொணர்ந்துகொடுக்கிறான். எதிர் பார்ப்பதன் பலன் இதுவே போலும்.

ளுயும், தொழிலாளியாயும் ;அமர்ந்தான். நாயுடுவும் அவனுடைய குணம், சீலம், ஒழுக்கம் முதலியனவற்றைக் கண்டு மெச்சித் தமது தொழிலைக் கற்றுக்கொடுக்க ஒப்புக்கொண்டு நேசனாக அமர்த்திக் கொண்டார்.

மதனகோபாலனுடைய மனம் அழியா, அசையா வைரமாய் விட்டது. பானுமதியின் நினைவினாலும், நாயுடுவின் துணையினாலும் தன் காலத்தை பொருவாறு நடத்தி வருகிறான். அவ்வாறான சமயத்தில் தான் நமது கதை ஆரம்பமாகிறது. மதனகோபாலன் ஒரு தினம் தன்னறையில் பானுமதியின் படத்தை வைத்துக் கொண்டு மனதில் பல பழங்கால சம்பவங்கள் தோன்றத் தன் போக்காகப் புலம்பிக்கொண்டிருக்கையில், ஸாவித்திரி அவ்விடத்திற்கு மிக்க வியசனத்துடனும் விரைவாயும் வந்து "அண்ணா! மோசம் வந்துவிட்டது, நான் என்ன செய்வேன்? நேற்று நாங்கள் ஒரு கல்யாணத்திற்குப் போனோ;மல்லவா! அதற்காக எதிர் வீட்டு எல்லம்மாளுடைய காசுமாலையை அம்மா வாங்கிக் கொடுத்தாள். அதை நான் போட்டுக்கொண்டு சென்று வந்தவுடனேயே திருப்பித்தர நினைத்தேன். அப்போது அவள் எங்கேயோ சென்றிருந்தாள். ஆகையினால் என் பெட்டியில் வைத்திருந்தேன். காலையில் வீட்டு வேலை அதிகமாக இருந்ததால் இப்போது பெட்டியைப் பார்த்தேன். நகையைக் காணோமே. என்ன செய்வேன்? அண்ணா! அயலார் பொருளாயிற்றே, அதை வெளிக் கள்ளர் யாரும் எடுத்திருக்க மாட்டார்கள். முன்பு என் ஒட்டியாணத்தை எடுத்தது போல என் கணவர்தான் எடுத்திருப்பார். இன்று குதிரைப் பந்தயத்திற்குப் போவதாக அவருடைய சகபாடிகளுடன் பேசிக்கொண்டிருந்தார். ஒருகால் அதற்குப் பணம் வேண்டுமென்று இப்பொருளை எடுத்துச் சென்றுவிட்டாரோ! சற்று முன்புதான் அவர் போஜனம் செய்து விட்டு சகாக்களுடன் புறப்பட்டு எழும்பூர் ஸ்டேஷனுக்குச்

தபாற்காரன் மனியார்டர் கொண்டு வரும் சமயத்தை நன்கறிந்த சில தந்திரிகள் அச்சமயத்திற்கு முன்னரே நம்மிடம் வந்து பேசிக்கொண்டு இருந்து தபாலில் பணம் வருவதை—வாங்குவதை—அறிந்து கடன் கேட்கிறார்கள். இது மகா தர்மசங்கடமாகிவிடுகிறது.

முக்கிய அறிவிப்பு

போன வருஷத்திய சந்தா நேயர்களுக்கு!

"சாமளநாதன்" கதை சென்ற 3-வது சஞ்சிகையில் முடிந்து விட்டதால், புத்தகம் பைண்டாய் விடும்; ஆகையால் வேண்டிய வர்கள் உடனே புது வருஷ சந்தாவை அனுப்பி பாக்கி சஞ்சிகை களைப் பெற்றுக் கொள்ளவும்.

புது சந்தா நேயர்களுக்கு!

"சாமளநாதன்" ஆரம்ப முதல் வேண்டியவர்கள் சென்ற ஆண் டின் 6 சஞ்சிகைகளுக்காக 12-அணுவும், இவ் வாண்டின் சந்தா ரூ. 1—8 ஆக மொத்தம் ரூ. 2—4 அனுப்பும்படி கேட்டுக் கொள்கி ரோம்.

ஸாரமதி

இந்த 4-வது இதழில் ஆரம்பித்திருக்கும் மேற்படி நாவல் 12-வது இதழில் முடிந்து விடும். இந்த 9 சஞ்சிகைகளுக்கு மாத் திரம் சந்தா சேர விரும்புவோர் ரூ. 1—2—0 அனுப்பினல் போதும்.

ருக்மிணீ காந்தன்

நமது கைவசம் சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டிய வர்கள் உடனே ரூ 1—12—0 முன்பணமனுப்பி தபாற் செலவின்றி பெற்றுக் கொள்ளவும்.

நவநீத கிருஷ்ணன்

இரண்டாம் பதிப்பு வெளியாய்விட்டது. சந்தா நேயர்களுக்கு விலை ரூ 1 12 0.

பரிசுகளின் விவரம்.

2-3-வது சஞ்சிகைக்குப்பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர் களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

N. 95. Srimathi Namagiri Ammal, Salem.

S. 324. Mr. S. S. Subbiah Pillai, Colombo.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித் தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர் களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்

அரிய சந்தர்ப்பம் ஒரு மாதம் வரையில்

புது வருஷக் கொண்டாட்டம்

நமது புதிய சந்தா நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நமது சொந்த நாவல்களை மூன்று கட்டுகளாகப் பிரித்து ஐந்து ரூபாய் முன் பண மனுப்பிகிறவர்கட்கு அவர்கள் கேட்கும் ஒரு கட்டு தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். ரூ. 15. மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு கீழ்க் கண்ட மூன்று கட்டுகளிலுள்ள புத்தகங்களுடன் "சுகந்தபுஷ்பம்" "கோபாலரத்னம்" "மாதவமணி" என்ற 3 நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

1.	2.	3.
வைதேகி	பத்மசுந்தரன்	நவநீத கிருஷ்ணன்
சாருலோசன	ராதாமணி	ருக்மிணீ காந்தன்
சண்பகவிஜயம்	கௌரீ முகுந்தன்	சாமளநாதன்
		வீர வஸந்தா

இனாம் ஒரு வருஷ சஞ்சிகையும் இனாம்

பல பரிசுகளும்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தது முதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப்பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து	முன்பண மனுப்புகிறவர்களுக்கு	மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசன

'ஜகன்மோகினி' ஆபீஸ்

26. தேரடித் தெரு, திருவல்லிக்கேணி

சென்னை.

நியூ இந்தியா

அஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், மதராஸ்.

தேவை.

கீழ்க் கண்ட ஜில்லாக்களின் எல்லா தாலுக்காக்களிலும், முக்கியமான நகரங்களிலும், நல்ல கமிஷனில் செல்வாக்கும், ஊக்கமும் மிகுந்த ஏஜெண்டுகள் தேவை:—

கோயம்பத்தூர்	வடஆற்காடு
நீலகிரீஸ்	தஞ்சாவூர்

திருச்சி

இவ்வளவு வேலை செய்யமுடியும் என உத்தரவாதமிட்டு ௸ ஜில்லாக்களில் எவற்றிற்கேனும் ஸ்பெஷல் ஏஜென்ஸிகள் வேண்டுமென மனுச் செய்து கொள்ளுபவரின் மனுக்கள் ஆலோசிக்கப்படும்.

கீழ்க்கண்ட ஜில்லாக்களின் ஏஜென்ஸிகளுக்கு நேராகவோ அல்லது அவற்றிற் கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கோ மனுச் செய்து கொள்ளவும்:—

தென்னாற்காடு—மிஸ்டர் ஓ. என். முத்துசாமி ஐயர், நெ. 97, வட ரத வீதி, சிதம்பரம்.

திருநெல்வேலி— ,, பி. பி. கே. பொன்னுசாமி நாடார், தென் ராஜதெரு. தூத்துக்குடி.

திருவாங்கூர் — ,, எஸ். சிவராம கிருஷ்ணய்யர், பட்டம் திருவனந்தபுரம்.

செங்கற்பட்டு — ,, கே. ரத்னம் முதலியார், திருப்போரூர், செங்கல்பட்டு.

ராமநாதபுரம் ஜில்லாவும், புதுக்கோட்டை சமஸ்தானம்—ஸ்ரீமான் D. V. அருணாசலம், (ஜெனரல் ஏஜண்ட்) ஜர்னலிஸ்டு: 'மாணிக்க விலாஸ்' தேவகோட்டை.

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்,

நெருப்பு, கப்பல், மோட்டார் கார் இன்ஷியூரன்ஸ் ஏஜென்ஸிகளுக்குக்கூட செல்வாக்கு வாய்ந்த கனவான்களிடமிருந்து விண்ணப்பங்கள் தேவை.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;
உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.
அளவு 18 x 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 2-வது ரகம் ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 x 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 x 2¾ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for " JAGANMOHINI OFFICE "
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

சென்றார். அவர்கள் சம்பாஷணையிலிருந்து இதைத் தெரிந்து கொண்டேன். என்ன செய்வேன் அண்ணா!" என்று கதறிய வாறு அங்கு உட்கார்ந்திருந்த மதனகோபாலனின் காலில் விழுந்தாள்.

தன் மனதில் எத்தகைய சோக மிருப்பினும் அதை உள் ளடக்கிக் கொண்டு தன் தங்கை மீதுள்ள பாசத்தினால் அவளை எடுத்து உட்காரச் செய்து "அம்மா! ஸாவித்திரீ! ஏன் வீணாகப் புலம்புகின்றாய்? வாயை மூடம்மா! நான் உனக்குப் பல தரம் கூறி யிருக்கிறேன், இப்போதும் சொல்கிறேன். அயலாருடைய நகையை இரவல் வாங்கி அணிவதைப் போன்ற கேவலம் வேறேதுவுமே இல்லை. அவ்விதமாக அலங்காரம் செய்து கொண்டு சென்றால் அது உன் சொந்த பொருளாகிவிடுமா? ஊரார் நகை, சேலை முதலிய வற்றை இரவல் வாங்குவதில் பல விதத்திலும் நஷ்டமே யன்றி லாபமில்லை. தனக்கென இருக்கும் சொற்ப பூஷணத்தை அணிந்து செல்வதற்கு உள்ள கௌரவம் இரவல் நகைக்கு இல்லை. தனக்கு வக்கில்லை, ஊரார் நகையை இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டு மினுக்குகிறாளென்கிற இளப்பமான சொல்லே பிறக்கும். பலர் நகைத்து வம்பு பேசுவார்கள். அன்னியருடையதை இரவல் வாங் கிக் கெட்டுப் போய்விடுமாயின், அதற்கு அவர்கள் சொல்லியபடியே விலையைக் கட்டாயம் கொடுத்துத் தீரவேண்டும். நகைகள் ஒடிந்து போகாதிருப்பினும் கூட சிலர் ஒடித்து விட்டதாயும், கோணலாகச் செய்து விட்டதாயும், பாழ் படுத்தியதாயும் கட்டாயம் சொல் வார்கள். இரவல் நகையும் சேலையும் வாங்குவதைவிட விவாக வீட் டிற்குப் போகாதிருப்பதே நலமல்லவா? அந்த நகையின் பொருட்டா உன்னை மதிக்கின்றார்கள். நகையை மதிக்கும் அத்த கைய மக்களை நீ மதிக்காதே, நகைக்கும் உயர்ந்த சேலைக்கும் மரி யாதை செய்வதாயின் அவைகளை அனுப்பி விட்டுப் பேசாதிருக்க

தனியாக உட்கார்ந்து உண்பதில் சாப்பாடு அதிகம் பிடிப்பதில்லை. நான்கு பேருடன் உட்கார்ந்தால் சாப்பிடச் சாப்பிட இழுக்கிறது. நால்வரும் பேரிரைச்சலுடன் கொண்டாட்டமாகப் பேசுவதில் சாப்பிடும்போதே அந்த உணவு ஜீரணமாகிக்கொண்டே வருகிறதோ என்னவோ தெரியவில்லை,

லாமே! எத்தனை நகைகளை அணிந்தும் சரிகை மயமான பட்டாடைகளைத் தரித்தும் சென்றாலும், அவர்களுடன் கலந்து பேசுவது நீயோ? உனது ஆடையாபரணங்களா? ஆடையாபரணங்கள் தனக்கென்று சொந்தமாக உள்ளவற்றைப் போட்டுக் கொண்டால் பாதக மில்லை. இரவல் பெற்றேனும் அலங்காரம் செய்து கொள்ள வேண்டுமென்று என்ன விதி? நாம் இரவல் கொடுத்து எத்தனை சாமான்களை இழந்திருக்கிறோ மென்பது உனக்குத் தெரியாதா? அதை யறிந்தும் நீ இரவல் வாங்கிச் செல்லலாகுமா? இரவல் வாங்குவதிலேயே சிலருக்கு நாட்டம். ஓயாது இரவல் புத்தகம் வாங்கிப் படிப்பதே சிலருடைய வழக்கம். இரவல் புத்தகத்தைப் பெற்றுக் கிழித்து அதைச் சின்ன பின்னம் செய்து விடுவதோடு, கொடுக்க வில்லை என்பதற்கு நிஷ்டூரம் பேசுவது வேறு. இரவலாக எந்தப் பொருளும் வாங்காதே என்று நான் அநேகம் தடவை உனக்குக் கூற வில்லையா? அந்தக் காசுமாலையின் விலை இப்போது என்ன இருக்குமோ. அவர்கள் சொல்வது எத்தனை ஏறப் போகிறதோ? மகா குடிகாரனாகிய உன் புருஷன் கையில் சிக்கிய நகையும், யமனிடம் சென்ற என் கண்மணியின் உயிரும் திரும்பக் கிடைப்பதேது? உன் விதி இது. உனது ரூபத்திற்கும், புத்திக்கும், உத்தம குணத்திற்கும் ஏற்ற கணவன் கிடைக்கும்படியான பூஜாபலன் நீ செய்ய வில்லை. இப்போது என்னசெய்ய வேண்டு மென்கிறாய்? சொல். உன்னிஷ்டப்படியே செய்வோம்'' என்றான்.

அண்ணனுடைய அரிய மொழியைக்கேட்ட ஸாவித்திரிக்கு மனம் சற்று சமாதானமாயிற்று. எனினும் அத்தனை பெரிய விலையுள்ள நகையை எவ்விதம் திருப்பிக் கொடுப்பது என்கிற பெருங் கவலை வந்துவிட்டது. தன் அண்ணனை நோக்கி ''அண்ணா! நாம் இப்போதே புறப்பட்டு எழும்பூர் ஸ்டேஷனுக்குச் செல்வோம். அங்கிருந்து இத்தனை நேரம் போயிருப்பாரோ என்னவோ? எதற்கும் நாம் சென்று அவர் அங்கிருந்தால் நகையை என்ன செய்தாரென்பதையேனும் தெரிந்துகொண்டு வரலாம்'' என்றாள். தங்கையின் வார்த்தைக்குத் தடையுரைக்காது உடனே மதனகோபாலன் எழுந்து புறப்பட்டு அவளுடன் ஸ்டேஷனை நோக்கிச் செல்லலானான்.

சில குழந்தைகள் மிகவும் பாலியத்திலிருந்தே தகுந்தாற்போல பேசி ஆளை மயக்கிவிடுகின்றன. சிலவோ பெரியதாயினும் மண்டூகந்தான்.

2-வது அதிகாரம்

பரத்தையரின் நேசம் பெருத்ததோர் மோசம்

சென்னையிலுள்ள ஓர் பிரபலமான சிவாலயத்தில் இரவு 8 மணிக்குக் கூட்டம் கழுத்தை நெரிக்கின்றது. எங்கு பார்த்தாலும் ஆண் பிள்ளைகளின் கூட்டமே யன்றிப் பெண்களின் கூட்டம் எங்கோ ஒரு சிறிதுதான் இருக்கிறது. அன்று நடக்கும் விசேஷ உத்ஸவத்தில் இரவு 8 மணிக்குமேல் அத்தேவாலயத்தின் தேவதாசியாகிய அம்ருத பாஷிணி என்னும் கட்டழகி— காமசுந்தரி— அன்று அபூர்வமாக மோகினி வேஷம் பூண்டு நாட்டியமாடப் போகின்றாள். ஆகையினால் அத்திருக்கோவில் தாசியின் அற்புத நடனத்தைக் கண்டு ஆநந்திக்க வேண்டி அநேக மைனர்களும், மேஜர்களும்,, சிற்றின்பப் பித்தர்களும், இன்னுமநேகம் பேர்வழிகளும் அக்கோயிலில் ஸ்வாமி புறப்படுவதற்கும் இடமின்றி நிறைந்து விட்டார்கள். எப்போது ஸ்வாமி புறப்படும், எப்போது அம்மோகனாங்கி வருவாள் என்று ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கையில் "படார்! படார்!" என்று அதிர் வெடியும் அவுட்டும் வெடித்தன. பலவித வர்ண புஷ்பங்களை வாரிக் கொட்டும் 'அவுட்' பாணம் எல்லோருடைய கண்களையும் பரித்தது. அந்த வெடி வெடித்த அடுத்த நிமிடத்தில் சாக்ஷாத் ஜகதீசனான ஷண்முகன் மயில்வாகனரூடராய் ஜகஜ்ஜோதியாய் எழுந்தருளினார். அவருக்கு முன்னால் எத்தகையவரும் பிரமிக்கத் தக்க வங்தெழில் பொருந்திய அமிர்தபாஷிணி, மோகினி வேஷத்

"ஆயிரந்தலைகளைக் கண்டால் அன்றுடம் செய்த பாவம் நீங்கும்" என்பது ஓர் பழமொழி. ஆயிரம் மனிதர்கள் கூட்டத்தின் மத்தியில் எழிலே உருக்கொண்டு விளங்கும் சர்வலோக பிதாவாகிய பார்த்தஸாரதி, தெப்பத்திற்கு வெகு வேகமாக எழுந்தருளும் சேவையின் வைபவத்தைத் தரிசித்துக் களிக்க ஆயிரம் கண்களிருப்பினும் போதா.

துடன் அன்னம் நாணிப் பின்னிடும் அழகிய நடையுடன் புன்னகை பூத்த வதனத்துடனும், முழந்தாளுக்குக் கீழ்ப் புறளும் அளக பாரத்தின் பின்னலழகும், சின்னஞ் சிறு இடையும், மை தீட்டிய மயக்கு விழியின் மாயப் பார்வையும், பொன்னை யுருக்கி வார்த்தது போன்ற அவள் மேனியின் அற்புத வசீகரமும், சரிகை மயமாக மின்னுகிற துல்லிய வெண் பட்டாடையின் அழகும், கலீர் கலீர் என்று ஒலிக்கும் பாத சரத்தின் ஓசையும் ஒன்று கூடிய அம் மாதரசி, சிங்காரமாக வர, அவள் பின்னால் தாளத்தைத் தட்டிக்கொண்டு நட்டுவக்காரன் சரிகைத் தலைப் பாகையும், உருமாலும் அணிந்து தடபுடலான படாடோபத்துடன் வர, அவன் பக்கலில் மிருதங்கம், முகவீணை, சுருதி முதலியவற்றை வாசிக்கும் நண்பர்கள் வாசித்துக் கொண்டே வர அம் மோகன சிங்கார வடிவழகி கடவுளின் எதிரில் வந்து நின்றாள். அந்த அற்புதமான காட்சியைக் கண்ட எல்லோரும் மயங்கித் தியங்கி பிரமித்துத் தலை சுழன்று அப்படியே ஒருவர்மீ தொருவராகச் சாய்ந்தும், கீழே விழுந்தும் பல்லை இளித்தும் கையைக் கொட்டியும், தலையைத் தடவியும் கையைப் பிசைந்தும் தம் தம் போக்கான உன்மத்தச் செய்கைகளுடன் நின்றார்கள். பிறகு அவர்களுடைய மன நிலைமையையும் பக்தியின் பிரபாவத்தையும் கூறவேண்டுமோ? நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் அங்கு எழுந்தருளி யிருக்கும் சாக்ஷாத் ஈச்வரனைக் கண்ணாலும் பார்க்கவில்லை. அரோ ஹரா !என்ற சப்தம் சிவன் கோயிலில் முழங்குவது வழக்கம். ஆனால் இந்த சமயத்தில் அரோஹரா என்று கூறுபவர் ஒருவரையுங் காணவில்லை. நூற்றுக்கு ஒருவர் சொன்னால் அக்கோஷம் அக் கூட்டத்தின் பேரிரைச்சலில் கதவின் கீழ்க் கத்தும் எலியின் தொனி போல மறைந்துவிட்டது. அத்தனை கூட்டமும், "அடாடா! என்ன மோகினி வேஷம்! என்ன அற்புத வடிவம்! பார்த்தாலும் பசி யாருமே! கண்டாலும் களி தீருமே!

ஒவ்வொரு உத்ஸவத்தின் மகிமை ஒவ்வொரு அழகு. அவ்வப்போது சேவிக்கையில் தேகம் பூரித்து ஆநந்த மயமாக ஆய்விடுகின்றது. எந்த விடத்தில், எந்த கோலத்தில், எந்த திருக்கோலத்தில் சேவித்தாலும் தெவிட்டாத தெள்ளமுதம் என்னப்பன் பார்த்தஸாரதியே!

என்ன அழகு நடை! என்ன சொகுசான உடை! என்ன குலுக்கு நடை! என்ன ஷோக்கான பார்வை! அடா டா டா டா டா டா என்று டா டா டா சப்தமே அண்டத்தை அளாவுகின்றது.

அம்ருதபாஷிணி அத்தனை ஜனங்களையும் நோக்கியவாறு ஸ்வாமியின் எதிரில் நின்று வணங்கிய பின்னர்,

(இரட்டை ஆசிரிய விருத்தம்)

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
போய்கைதனில் விளையாடியும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க வரிகரப் பிரமாதி கட்கும்
செருக்கமுடி யாவசுரனைத்
தேகங்கிழித்துவடி வேலினாலிருகூறு
செய்தமரர் சிறைத விர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனில்
நினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ!
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே! வள்ளி கணவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(குமரேச சதகம்)

என்ற பாடலை வெகு இனிமையான வீணாகானம் போன்ற தன் குரலினால் பாடித் துதித்தபின் அபிநயத்துடன் ஆடத் தொடங்கினாள். நட்டுவனும் கூடவே 'ததிகிண தோம்! தளாங்கு தகிட

மனைவி உயிருடன் இருக்கும் பரியந்தம் சதா சண்டை யிட்டு அவளை வதைத்துக் கசக்கிச் சார் பிழிவது. அவ்வுத்தமி இறந்த பிறகோ 'ரஸம் அன்னம் ருசியாகச் செய்து பயபக்தியுடன் படைப்பாரில்லையே' என்று ஏங்கி அழுவது. இது சில புருஷர்களின் வழக்கம்.

தோம்' என்று பாடிக்கொண்டே அவளுடன் ஆடியும் ஓடியும் உடலை வளைத்தும் கலைத் பழகுவது போலப் பழகலானான். வெகு வெகு விநோதமாக ஆட்டக் கச்சேரி நடக்கையில் அங்குள்ள ஒவ்வொருவரும் மோதிரங்களையும், ரிஸ்டு வாச்சுக்களையும், நோட்டுகளையும் பவுன்களையும், ரூபாக்களையும் வாரி அமிர்தபாஷிணிக்கு வர்ஷம் போல இறைத்தார்கள். அவளுடன் கூட வந்திருக்கும் தாய்க் கிழவியும் மாமாவும் அவைகளை எடுத்து வைத்துக்கொண்டு "இன்று இவளுடைய வலையில் விழுந்த மைனர்கள் யார் யார்? என்று பார்த்துக்கொண்டே இருந்தனர்.

இரவு 11 மணி வரையில் ஆட்டக் கச்சேரி அற்புதமாக நடந்தது. பிறகு ஸ்வாமி தரிசனமும், தேவதாசி தரிசனமும் முடிந்தது. அக்கும்பலில் நின்றிருந்த கிருஷ்ணசாமி என்றவன் உடற்கட்டும், சரீர காந்தியும், மிக்க எழிலுடன் உயரமும், அதற்கேற்ற பருமனும் உடையவன். அவனுடைய மனத்தை அந்த சுந்தராங்கி ஆகிய அமிர்தபாஷிணி அப்படியே காந்தம் போல இழுத்து விட்டாள். அது பரியந்தம் மகா பரிசுத்தனாக விருந்த கிருஷ்ண சாமியின் மனத்திற்குக் களங்கம் உண்டாகி விட்டது. அவன் அதிக தனவந்தனன்று. சாதாரணமாகப் பொருளுடையவன். ஏதோ ஒரு ஆபீஸில் மாதம் 50 ரூபாய் சம்பளத்திலிருப்பவன். அவனுக்கு ஓராண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் உண்டு. மனைவி மகா உத்தமி. வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யும் சாமர்த்தியசாலி. அன்று உத்ஸவத்திற்கு அவளும் கோயிலுக்கு வந்திருந்தாள். கிருஷ்ணசாமிக்கு மனம் வேறு பட்டதை அவன் மனைவியாகிய ரங்கமணி என்பவள் சற்றும் அறியாள். ஆகையினால் சாதாரணமாக வீட்டிற்குப் புறப்பட்டாள். கிருஷ்ணசாமியும் பிறகு சற்றுநேரம் தயங்கி நின்று விட்டு வீடு சென்றான். கூட்டமும் கலைய வாரம்பித்தது. எல்லோருடைய மதி

அருமை தெரியாத மனிதர்களை 'கட்டை' என்று கூசாது கூறலாம் "பிராணன் போகிறது. இந்த ஜலத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்", என்றால் "அப்படிப்போகும் பிராணன் தங்குமா என்ன! அதை நீயே எடுத்துக் கொடுத்துவிட்டுப்போ" என்கிறார்கள் அந்த ஈவிரக்கமற்ற மனிதர்.

யையும், மயக்கும் மாயக்காரியாகிய அமிர்தபாஷிணியும் தனக்கென நின்றிருந்த வண்டியிலமர்த்து வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டையடைந்த கிருஷ்ணசாமிக்கு அன்று நித்திரை கொள்ளாதிருப்பது வியப்பா? இவன் போன்ற எத்தனை பேர்கள் இவ்விதமான பாழும் வலையில் விழுந்து மீள வகையின்றிக் குடும்பத்துடன் அதோ கதி யானார்களோ! 'இன்ஸால்வென்ஸி' கொடுத்தார்களோ! கடனும், நோயும் சேர்ந்து பிடிப்பதைத் தாங்காது தற்கொலை புரிந்து கொண்டார்களோ! எத்தனைபேர் புத்தி சுவாதீனமற்று பித்தம் பிடித்துச் சந்தியில் அலைந்தார்களோ! பிரபஞ்ச விலாசத்தில் இத்தனை கூற்றுகள் நடை பெற்று வருவதைக் கண்டும், கேட்டும், மீண்டும் மீண்டும் இவ்வித கோரமான பாபம் நிறைந்த முட் புதரில் செல்லா திருப்பதைக் காணவில்லையே! இந்த வகையில் நமது கிருஷ்ணசாமியும் ஒருவனெனலாம். அந்த அமிர்தபாஷிணி தன் வீட்டிற்கு எதிர் வீட்டிலேயே இருப்பதை அறிந்திருந்தும் இது வரையில் கண்ணெடுத்தும் பாரா திருந்த கிருஷ்ணசாமிக்கு அன்றே பிடித்தது பெருஞ் சனியன். "நம்முடைய வீட்டிற்கெதிர் வீட்டிலேயே சதா இருக்கும் அமிர்தபாஷிணியா இந்த மோஹனாங்கி! ஐயோ! இத்தகைய ஏந்திழை மடந்தையின் திவ்ய தேஜஸைக் கண்டு களிக்காது பாழாகி விட்டோமே; ஆகா! என்ன எழில் மிகுந்த சுந்தர வடிவம்! அளகபாரத்தின் அமைப்பை என்னென்பது! ஆதி காலத்தில் சாக்ஷாத் எம்பெருமான் மோகனாவதாரம் செய்தாரென்றும் எல்லோருக்கும் அமிர்தத்தை முகந்து அளித்தாரென்றும் நாம் படிக்கின்றோமேயன்றிக் கண்டதில்லை. இந்த மின்னாளின் மோகினி வேஷத்தைப் பார்க்கும்போது இவள்தான் அந்த மோகனாங்கியோவென ப்ரமிக்கும் வண்ணமா யன்றோ இருக்கின்றாள்! அடடா! என்ன வசிகரம்! நாட்டியத்தின் விசித்ராந்தானென்னே! இதுகாறும் அவளுக்குச் சமீபத்திலிருந்தும் அவளுக்

"தனக்கொருவிதமான உணர்ச்சியு மில்லை" என்கிறவர்களும் சிருங்கார ரஸமான விஷயங்களை வெகு ஆனந்தமாகவே கேட்கிறார்கள். அதற்கு மட்டும் உணர்ச்சியற்ற மனிதனாக விளங்கக் காணோம். உலகமே இவ்விதந்தான் போலும்.

கும் நமது மனைவிக்கும் பழக்க மிருந்தும், நமது குமாரனை அவள் அன்புடன் தூக்கி வைத்துக்கொள்ளும் சிநேக மிருந்தும், நாம் அவளைக் கண்ணெடுத்தும் பாராத குருடனாக வன்றோ காலத்தை வீணாகக் கழித்துவிட்டோம். சிச்சி! அவளைப் பாராத கண்களும் கண்களா? அவை கேவலம் புண்களே! அவள் இனிய மொழிகளைக் கேளாத செவியும் ஒரு செவியா! அது எறும்பு, ஈசல், பாம்பு முதலியவை அடையும் புற்றன்றோ! அவளுடைய அழகிய வடிவத்தை ஸ்பரிசிக்காத கைகளும் கைகளாமா? அவை வெறும் உலக்கைகளே, பலகைகளே, மூங்கிற் கழிகளே!" என்று பகவானையே தஞ்சமென்று சரணாகதி செய்யும் தொண்டர்கள் அவரை நோக்கித் துதிப்பதுபோல, இந்த மூட கிருஷ்ணன் மனத்தில் எண்ணி ஏங்க வாரம்பித்தான். அன்றைய பொழுது தொலைவது மிகவும் சிரமமாயிருந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. கிருஷ்ணன் மனம் இது விஷயத்திலேயே கலங்கிப் போராடிக்கொண்டிருந்தது. தன்னறையில் உட்கார்ந்து தன் உத்தியோக சம்பந்தமான ஆபீஸ் வேலைகளைச் செய்யப் புகுந்தான். அமிர்தபாஷிணி தலையை அவிழ்த்து ஆற்றிக்கொண்டே அவள் வீட்டின் பலகணியில் உலாவினாள். அந்த சித்திரப் பாவையைக் கண்டு மதி மயங்கிய க்ருஷ்ணன் எழுதுகோலும் கையுமாக அப்படியே அமர்ந்துவிட்டான். தான் எவ்வகையில் அந்த மின்னாளை அடைவதென்னும் ஒரு பெருங் கவலை அவன் மனத்தில் புகுந்து வேலை செய்யத் தொடங்கியது. இதுகாறும் தான் ஏக பத்தினி விரதனாக இருந்ததும், தற்போது இவ்விரதம் கெட்டுப் போய் விடுவோமே என்னும் நினைவும் அவன் மனத்தில் ஒரு சிறிதும் தோன்றவில்லை. அந்த மாதரசியின்மீது பதிந்த மனத்திற்கு மீட்சி என்ப தற்றுவிட்டது. கிருஷ்ணனுடைய ஆண் குழந்தை பார்ப்பதற்கு அழகாயும், சுருசுருப்பான விளையாட்டும்

பிறரிடத்திலிருந்து நல்ல விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுமாயின் முதலில் தாம் ஏதேனும் சிறிது விஷயத்துடன் புளுகு மூட்டையையேனும் அவிழ்க்கவேண்டுமாம். அவ்வாறு கூறுகையில் அவர்களிடமுள்ள நல்ல விஷயங்கள் நமக்குத்தானே கிடைத்துவிடுமாம். இது ஒரு அனுபவியின் வாக்கு.

சிரித்த முகமும் வெகு வசீகரமான பார்வையும் கூடியதாகையால், அமிர்தபாஷிணிக்கு அக்குழந்தையின்மீது தானாக ப்ரீதி உண்டாகி, அக்குழந்தை வீதியில் வரும்போதெல்லாம் அதைத் தூக்கிக் கொண்டு சென்று அதோடு கொஞ்சிக் குலாவி அதற்குத் தின்பண்டங்களைக் கொடுத்துச் சீராட்டுவாள். அன்றும் அதுபோலவே அம்மின்னாள், க்ருஷ்ணனின் குழந்தையாகிய வாசுதேவனை வாரி எடுத்துச் சென்றாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த க்ருஷ்ணன், "அக்கட்டழகி ஏன் உள்ளே சென்றாள்? இங்கேயே நிற்கலாகாதா?" என்று மனம் வருந்தி ஏதேதோ மனக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தான். நேரமாகிவிட்டதால் உடனே எழுந்து விதியை நினைத்து வேலையை முடித்துக்கொண்டு ஆபீஸுக்குச் சென்றான். அந்திப் பொழுதை வெகு விரைவில் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மாலை வந்ததும் வேலையை ஒருவாறு முடித்துக்கொண்டு வீடுவந்து முன்போலவே ஜன்னலருகில் அமர்ந்தான். அப்பொழுது சுமார் ஆறுமணியிருக்கும். அவன் பற்பல விதமாக யோசனை செய்துகொண்டே உட்கார்ந்திருந்தான். அந்த சுந்தராங்கி அன்றும் சர்வாபரண பூஷிதையாய்க் கோயிலுக்குச் சென்றாள். அதைக் கண்ணுற்ற க்ருஷ்ணனும் எழுந்து தானும் ஸ்வாமி தரிசனம் செய்வதாகக் கூறிவிட்டு கோயிலுக்குச் சென்றான். அன்றும் கோயிலில் ஆடல் பாடல் முதலிய யாவும் நடந்தேறின. யாவரும் வீடு திரும்பினர்கள். அமிர்தபாஷிணியும் வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள். தலைவிதியே என்று க்ருஷ்ணனும் வீடுவந்தான்.

இவ்விதமே இரண்டு மூன்று தரம் க்ருஷ்ணசாமி மிகவும் கஷ்டப்பட்டான். இவனுடைய மாறாட்டத்தை யறியாத ரங்கமணி, எப்பொழுதும் போலவே இருந்தாள். க்ருஷ்ணனின் குமாரனை வழக்கம்போல அமிர்தபாஷிணி எடுத்துச் சென்றாள்.

எந்தத் தின்பண்டமாயினும் மிகவும் வேண்டியவர்களுடன் கூடி உண்பதே ஓரானந்தமும் ருசியுமாக இருக்கிறது. கவலைப்பற்ற சிடு மூஞ்சிகளின் முன்னிலையில் நிற்பதற்கும் பிடிப்பதில்லை.

210030

அதை பறித்த க்ருஷ்ணன் வேறு வழி கிடைக்காமையினால், குழந்தையின் முகாந்தரத்தைக் கொண்டு தான், நாம் செல்லவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு, குழந்தையைத் தேடுபவன் போல "வாஸு! வாஸு! வாசுதேவா!" என்று உரக்கப் பலதரம் கூப்பிட்டான். அதற்குமேல் மெல்ல அந்தப் பொற்கொடியாளின் வீட்டிற்குச் சென்று "அம்மா! இங்குக் குழந்தை இருக்கிறானா! அவன் இன்னும் சாப்பிடவில்லை. அதற்காகத் தேடிக்கொண்டு வந்தேன்" என்று கூறியவாறு உள்ளே நுழைந்தான்.

இயற்கையிலேயே அழகாக விருக்கும் க்ருஷ்ணசாமியைக் கண்ட அந்த மின்னாளும், அவன்மீது ஒருவிதமான இச்சை கொண்டு அவனை அடிக்கடி வீதியிற் சென்று பார்ப்பாள். அங்ஙனமே அன்றும் க்ருஷ்ணன் வந்தவுடன் "வாருங்கள் ஸ்வாமி! வாருங்கள். உட்காருங்கள்" என்று வெகுவாய்க் கூறி உபசரித்தாள். சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தாற்போலவும், பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போலவும் அவன் மனம் களித்தது, உடனே போய் உட்கார்ந்தான். அப்போதுள்ள மனப் பூரிப்பைக் கூறவேண்டுமா! மனமாகிய சமுத்திரம் பொங்க வாரம்பித்தது. "இனிமேல் நமது ஜன்மம் சாபல்யமாகிவிட்டது!" என்று தீர்மானித்துவிட்டான். அவளை நோக்கி "இந்தப் பயல் எப்போதும் உங்கள் வீட்டிலேயே குடியாக இருக்கிறான். வீட்டிற்கே வரமாட்டேனென்கிறான். இவனை உங்களுக்கே ஸ்வீகாரம் கொடுத்துவிடுகிறேன்" என்று புன்னகையோடு கூறினான்.

இதுகேட்ட அமிர்தபாஷிணி, சிற்றிடை குலுங்க நடந்து நகைபுரிந்து வந்து நின்று, "ஆகா! ஸ்வீகாரம் கொடுக்கமாட்

பார்ப்பவர்களுக்கு ஒன்றுமே தெரியாதவன் போன்று நடந்துகொண்ட மனிதன் தன் காதலிஅருகில் வந்த—சோபன கல்யாணமாகிய—அன்று முதல் நடந்துகொள்ளும் மாதிரியையும், சரஸ கேளிகாவினோதமாக இருக்கும் தன்மையையும் முன்னர் கண்ட மனிதர்களுக்கே அடங்கா வியப்பை யளித்து விடுகின்றது. இத்தகைய அன்பையும் செய்கையையும் இதுகாறும் எவ்விதம் மறைத்தானோ!" என்று ப்ரமிக்க நேருகின்றது.

டீர்களா? இவ்விதம் சொல்பவர்கள் வெகு பேர்கள். எதையும் கொடுக்கிறேனென்று கூறுகிறவர்கள் கொடுத்துப் பார்த்தது தான் கிடையாது. அதிலும் நான் ஒரு தாசி; எனக்கு உங்கள் குழந்தையைக் கொடுக்க உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்து விட்டது? அவனுடைய இனிமையான மழலைச் சொற்களும், சமத்தான போக்கும், அழகும் என்னைப் பரவசப் படுத்திவிட்டன. அதனாலேயே அவனை நான் விடாது தூக்கிக்கொண்டு வந்து விடுகிறேன். சில சமயங்களில் எனக்கு அவன் துணையாயு மிருந்து பொழுதைப் போக்குகின்றான். பிறந்தாலும் இத்தகைய குழந்தை யல்லவா பிறக்கவேண்டும்? நீங்கள் நல்ல பூஜாபலம் செய்திருக்கிறீர்கள். அதனாலேயே இத்தகைய புத்திர ரத்தினம் பிறந்திருக்கிறது. இவனை எனக்கென்று கொடுத்துவிட்டால் நான் தாவித் தாண்டிக் குதிக்கமாட்டேனா! தலைமீது வைத்துக் கூத்தாடுவேனே! என் கண்ணில் வைத்து இமையினால் மூடுவேனே. என் உயிரையே இவனிடம் அர்ப்பணம் செய்துவிடமாட்டேனா" என்று ஜாதிக் கேற்ற தளுக்கு மினுக்குடன் கூறினாள்.

இந்த அற்புதமான அமுதத்தைப் பருகுவதற்கே வந்துள்ள க்ருஷ்ணசாமிக்கு அளவிலடங்காத சந்தோஷம் பொங்கி விட்டது. பல்லிளித்துக்கொண்டே பேசத்தொடங்கி "ஆகா! என்ன அருமையான குணம்! உங்களுடைய அற்புத வடி வழகிற்கு முன்னால் உலகில் வேறெவரேனும் நிற்கக் கூடுமா? அடடா! அன்று நீங்கள் சாக்ஷாத் மோகனாவதாரமாக வன்றோ விளங்கினீர்கள்! அத்தனை ஜனங்களையும் தடை கட்டிய நாகம் போலல்லவா நீங்கள் செய்துவிட்டீர்கள்? அந்த நாட்டியத்தின் மகிமையை என்னென்று சொல்வேன்? ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் வர்ணிக்க வியலாதெனின், என்னால் கூற முடியுமா? நான் இதுவரையில் எத்

காதலியின் வருகைக்கு முன்னர் ஒரு மனிதன் தனது மனிதரிடத்தில் நடக்கும் மாதிரி யொரு தினுசு; அந்த அற்புதசிங்கார வடிவமமைந்த தேவதையைக் கண்ட பின்னரோ அன்றில் பட்சியாக மாறி "அந்த நங்கை யின்றி நான் இல்லை" என்னும் கருத்தை யுடையவனாகி விடுகிறான். இவை யாவும் தெய்வீகமான அன்பு—பாசமல்லவா?

தனையோ ஊர்களுக்கு ஆபீஸ் வேலை நிமித்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்குள்ள பல கோயில்களுக்கும் சென்றிருக்கிறேன். ஆடல் பாடல்கள் அநேகம் பார்த்திருக்கிறேன். இது போல நான் பார்த்ததே இல்லை. வெகு ஆநந்தம்" என்று தடபுடலாக ஸ்தோத்ரம் செய்தான். இருவரும் சற்று நேரம் குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரமானதும் குழந்தையை எடுத்துக்கொண்டு கிருஷ்ணன் வீடு திரும்பினான்.

அன்று முதல் காலையும், மாலையும்—நினைத்த நேரமெல்லாம்—க்ருஷ்ணன் அம்ருதபாஷிணி வீட்டிற்குச் செல்லத் தலைப்பட்டான். சில நாட்களுக் குள்ளாகவே பாஷிணி க்ருஷ்ணனின் மனத்திற் கிசைந்த காதலியாகிவிட்டாள். கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட திருப்திக்கும் சந்தோஷத்திற்கும் அளவே இல்லை. எதிர் வீட்டிலேயே பாஷிணி இருப்பதால் எந்த நேரமும் க்ருஷ்ணன் அங்குச் சென்று வெகு சிநேகமாகிவிட்டான். அந்த அமிர்த பாஷிணியை ஏற்கெனவே வைத்துக்கொண்டிருந்த கற்பகக் கோட்டை ஜமீந்தார் மாதத்திற் கொரு முறை வந்து சில தினங்கள் இருந்து விட்டுச் செல்வது வழக்கம். அவ்வாறு அவர் வரும் நாட்களில், பாஷிணி தன் மற்ற நட்பினர்களுக்கு வாராதிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டு, அந்த ஜமீந்தாரின் உத்தம பத்தினிதான் தான், கற்பரசி தான் தான் என்று நம்பும்படியாக வெகு உல்லாஸமாய் அவர்கள் ஜாதிப் பாசாங்குப் படிக்கு நடிப்பாள். ஜமீந்தாரும் பாஷிணியின் நடிப்பை நிச்சயமென்று நம்பி அவளுக்கு வேண்டியவற்றை எல்லாம் கொடுத்து குதூகலமாக இருந்துவிட்டுச் செல்வார். தாசிகளிடத்தில் தாஸானுபாவமாக விருந்தும் அவர்களின் மோசத்தைச் சற்றும் உணராத பேதையர்களாய்க் காசை நாசம் செய்யும் நீசர் எத்தனை பேர்களோ! தன் மக்கள் மனைவி என்பதையும் முற்

தேனும் பாலும் போன்ற அன்புடைய தம்பதிகளைப் பார்க்கவும் அவர்களின் களியாட்டங்களைக் கண்டு களிக்கவும் மனம் ஆநந்தமயமாகின்றது! இரு ஆடவர்களோ, பெண்களோ தனித்துப் பேசுவதையும் அன்பா யிருப்பதையும் கண்டால் சிருங்காரமாக இருக்கின்றதா? இல்லை, இல்லை. தம்பதிகளின் இன்பமே இன்பம்!

றும் மறந்து அல்லலுக்கு அவர்களை ஆளாக்கித் தாசி வீடே சத மென விருக்கும் கர்ம சண்டாளர்கள் எத்தனை பேர்களோ! பழகினு லும் தெரிவதில்லை; தானே நன்ருக நொந்து புண்பட்டு—குட்டுப் பட்டுப் பட்டு அனுபவித்துத் தெரிந்த பிறகே புத்தி வருவது உலகத் தில் இயல்பாகிவிட்டது. அதே போல கற்பனக் கோட்டை ஜமீந்தா ரும் இந்த வேசையின் பித்தலாட்டமும் சோரத்துவமும் தெரி யாமல் தன் உண்மையான நாயகி என்று எண்ணிக் கைப்பொருளை இப் பரதேவதைக்கு அள்ளி இறைக்கலானுர்.

மாதங்கள் பல கழிந்தன. அதிர்ஷ்ட மென்பது உலகில் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவரவர்கள் புண்யவசத்திற் கேற்றவாறு யாவும் அமைகின்றன. நமது க்ருஷ்ண சாமிக்கு இந்த தாசி விஷயத்தில் அதிகமான செலவு இல்லாமல் சிறுவருவாயும் ஏற்பட்டது. அதாவது குழந்தைக்குச் சட்டைத் துணிகள், க்ருஷ்ணனுக்கு சரிகை வஸ்திரங்கள் முதலிய இவை போன்ற சிறு வருமானமும் கிடைத்தன. க்ருஷ்ணன் ஆபீஸ் விஷய மாக எந்த ஊருக்குச் சுற்றுப் பிரயாணமாகச் சென்ருலும் இரண்டா வது வகுப்பு டிக்கட்டு இரண்டும் ஒரு மூன்ருவது வகுப்புச் சீட்டும் சர்க்கார் கொடுப்பது வழக்கம். பாஷிணி சிநேகிதையான பிறகு தான் எந்த ஊருக்குச் சென்ருலும் அவளைக் கூடவே அழைத் துச் செல்வது வழக்கமாயிற்று. இவர்களுக்குத் தகுந்த குருசாமி என்ற சமையல்காரன் ஒருவன் மூன்ருவது வகுப்பில் செல்வான். க்ருஷ்ணசாமியின் குதூகலத்திற்கும் ஆநந்தத்திற்கும் கூறவேண் டுமா? அவன் அந்த மின்னற் கொடியில் மறைந்து ஐக்கியமாகி விட்டான். இவளுடைய சுகானுபவத்தில் மூழ்கிய தன்மையில், தன் ஆபீஸ் வேலைகளைக் கவனிப்பதையும் மறந்தான். இரயிலில் இருவரும் ப்ரயாணம் செய்யும் தமாஷாவை வர்ணிப்பது சாத்ய

எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் பெற்றோருக்கு அது ஒருவித பாரமு மில்லை. அவைகளில் ஒன்று குறைந்து விடுமாயின் என்ன வயிற்றெரிச்சல் உண்டாகிறது.' அத்தனை பெற்ற வயிருயிற்றே என்று சங்கடமில்லாதிருக்குமா! அப்பப்ப! பிறவாதிருப்பதே பெரும் பேறு. பெற்றுப் பறி கொடுப்பதைப் போன்ற வியசனம் வேறெதுவு மில்லை.

மன்று. க்ருஷ்ணசாமி மெய்ம்மறந்த ஆக்கத்தில் தன்னை யறியாது ஒரு தினம் கோவென்று சத்தமிட்டுக் கத்திவிட்டான். இந்த அபாரமான கூச்சலைக் கேட்டு 'ரயில்வே கார்டும்' மற்றவோரும் ஏதோ ரயிலில் கொலையோ களவோ நடக்கிறதென்று பயந்து போய், ஓடோடியும் ஒவ்வொரு வண்டியாகப் பார்த்துக் கொண்டே வந்து, இந்த வண்டியில்தான் சத்தமாக விருக்கிறது என்று அறிந்து க்ருஷ்ணனிடம் வந்து விசாரிக்கும்போது, தனது நிலைமையை உணர்ந்த க்ருஷ்ணன், வெட்கித் தலை குனிந்தான். மேலும் இவன் ஓர் ஆபீஸ் காரியஸ்தன் ஆகையால் அதிகம் விசாரணை நடக்கவில்லை. எனினும் இவ்விருவரும் அடிக்கடி ரயில் பிரயாணம் செய்வதை அவர்கள் அறிவார்களாகையினுல், இவர்களைத் தம்பதிகளென்றே எண்ணி விட்டார்களாகையினுல் இவர்களை ஏதும் கேட்காமல் சென்றுர்கள்.

இவ்விதமாக க்ருஷ்ணன் செய்த வேடிக்கை ஒன்றிரண்டல்ல; திவ்ய க்ஷேத்திரம் ஒன்றுக்கு வேலையின் நிமித்தம் வழக்கம்போல இவ்விருவரும் சென்றிருக்கையில், ஸ்வாமி தரிசனார்த்தம் கோயிலுக்குச் சென்றுர்கள். அக் கோயிலின் அதிகாரி இந்த மாதரசியைக் கண்டு க்ருஷ்ணனிடம் "உங்களுடன் வந்திருக்கின்றுர்களே இவர்கள் யார்?" என்று விசாரித்தார். அதற்கு க்ருஷ்ணன், "இவளைத் தாசி என்று உண்மையைத் தெரிவித்தால் தனக்கு அகௌரவத்தோடு, அந்த அதிகாரியின் கண் பார்வை இவன் மீது சென்றுலும் சென்றுவிடுமென்று யோசித்துப் பின் பதில் பேசத் தொடங்கி "இந்தம்மாள் எங்கள் ஆபீஸின் அதிகாரியினுடைய மகள்; ஸ்வாமி தரிசனார்த்தம் அவர்கள் குடும்ப சகிதம் வந்திருக்கிறுர்கள்; இவர்கள் பிதாவுக்கு மூன்று ஆயிரம் ரூபாய் சம்பளம்" என்று தடபுடலாகப் பேசினுன்.

கல்யாண வீட்டிற்குச் செல்வதற்கும், கல்யாணம் விசாரிக்கச் செல்வதற்கும் வெகு சந்தோஷமாக மனம் தாவிச் செல்கின்றது. இறந்த துக்க விஷயத்திற்கோ கூற வியலாத விதமான வேதனை செய்கிறது. "எப்படிச் சென்று அவர்களைப் பார்ப்பது" என்ற ஏக்கமும் வருத்தமும் மனத்தை வாட்டுகின்றது.

கோயிலதிகாரியும் அதைக் கேட்டு உண்மை என்று நம்பி அவர்களுக்கு அபரிமிதமான உபசாரங்களைச் செய்து அள வற்ற ப்ரஸாதங்களைக் கொடுத்து ஸ்வாமியின் அருகில் அவர்களை அழைத்துச் சென்று ஒரு பலம் கற்பூரத்தை அப்படியே ஹாரத்தி எடுக்கச் செய்து அக் கற்பூரம் அணையும் வரையில் ஸ்வாமி தரிசனம் செய்வித்து அபாரமான மரியாதையுடன் தோத்திரம் செய்து அனுப்பினர். இதைக் கண்ட அமிர்த பாஷிணிக்கு ஆச் சரியமும் நகைப்பும் உண்டாய்விட்டது. "சாமீ! உண்மைக்கு இக் காலத்தில் மதிப்பில்லை" என்பதை இப்போது நன்கு விளங்கச் செய்துவிட்டீர்களே! உங்களுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம். காலத்தின் போக்கை நன்கறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி நீங்கள் மூட்டை யளக்க ஆரம்பித்துவிட்டீர்களே! பேஷ்! இக்காலம் பணத்திலும் படாடோபத்திலும் இருக்கின்றதே யன்றிச் சத்தியத் திலும் உண்மையான மதிப்பிலும் இல்லை யென்பது உங்கள் அனுப வத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம்" என்று க்ருஷ்ண சாமிக்கே ஒரு டோஸ் கொடுத்தாள். அதன் கருத்தை யறியாத காமாந்தகாரத்தில் கிடக்கும் க்ருஷ்ணன், அமிர்த பாஷிணி என்கிற பேருக்குத் தக்கபடி அவள் அமிர்தம் வர்ஷிப்பதை எண்ணி மிக்க மகிழ்ச்சி யடைந்து மெய்ம்மறந்து அம்மொழிகளைக் கேட்டவாறு நின்றான்.

பின்னும் அந்ததாசி பேசத் தொடங்கி "சாமீ! என்ன யோசனை செய்கிறீர்கள். நான் சொல்லியதில் ஏதேனும் தப்பிதம் உண்டா? நன் றாக சங்கீதம் தெரிந்தவர்களையோ கல்வியில் சிறந்தவர்களையோ கண்டால் அவர்களின் படாடோபமின்மையினால் அநேகர் அவர்களை இன்னார், இன்ன மதிப்புடையவர்கள் என்று தெரிந்து கொள்வதே இல்லை. ஒரு விதத்திலும் பாண்டித்திய மில்லாத சிலர்

நவரஸங்களின் உண்மைச் சுவைகளை நாவல் முதலிய எழுத்துப் பிரதி யிலோ, நாடகம் நடித்தலிலோ தான் காண முடியும் என்பது சிலர் கொள்கை. ஒவ்வொரு மனிதரின் குடும்பத்தில்—தினசரி ஜீவியத்தில்...நவரஸத்தின் ஸாரங்களைக் கண்கூடாகக் காணலாம். நடிப்பில்—படிப்பில்—காண்பதைவிட நேரில் அனுபவத்தில் காண்பதற்குத் தான் அதிக ருசிகரம் இருக்கின்றது.

சதா ராகத்தை இழுத்துக்கொண்டு தடபுடலாக அலங்கரித்துப் படாடோபம் செய்துகொண்டு வந்தால் அவர்களைக் கண்டு பெருத்த —கனத்த—வித்வானென்று மதித்து ஏமார்ந்தும் விடுகிறார்கள்; அவர்களையே பலாப் பழத்தை ஈ மொய்ப்பது போல மொய்த்துக் கொண்டு பாடச் சொல்கிறார்கள். அந்த டம்பாச்சாரிகள் பாட ஆரம்பித்த பிறகே அவர்களை நம்பி மோசம் போன பேதையர்கள் மனம் தம் குற்றத்தை உணர்கிறது. சாதாரணமாக ஒன்றுமே தெரியாதவர்கள் போன்று வந்திருக்கும் மனிதர்கள் பாட வாரம் பித்துப் பாடுகையில் அவர்களுடைய போக்பதைபை—ஆடம்பா மற்ற தன்மையை, அறிந்துகொண்டு வியந்து, முன்னர் அலக்ஷிய மாக இருந்தவர்களே பக்கத்தில் ஓடிவந்தமர்ந்து தடபுடலாக உறவு பேசி நேசமாகிப் பின்னர் தம் வீட்டிற்கு அவர்களை வர வழைப்பதும் தாம் அவர்கள் வீட்டிற்குச் செல்வதுமாகப் பழக்க மாகிவிடுகிறார்கள். இது ப்ரத்யக்ஷமாக நடக்கும் அனுபவமான விஷயம். அவ்வகையில் இந்தக் கோயில் பட்டாசாரியும், அதிகாரியும் சேர்ந்தவர்கள். பாவம்; எனது ஆடம்பரமான அலங்காரத்தையும் உங்களுடைய ஜகஜ்ஜாலப் புறட்டான வார்த்தையையும் கண்டு மயங்கிவிட்டார். நேரமாகிறது, வாருங்கள் போவோம்'' என்று கூறிக்கொண்டு தமது இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இவ்விதமான அண்டப் புளுகு மூட்டைகளை அளப்பதில் க்ருஷ்ணசாமி கைதேர்ந்த பேர்வழியாகிவிட்டான். அமிர்த பாஷிணியின் நேசம் ஆரம்பித்து சுமார் ஒரு வருடகால மாகிவிட் டது. க்ருஷ்ணசாமியின் மனைவியான ரங்கமணி யம்மாளின் மனம் மிக்க தூய்மையானது. எனினும் தன் பதியின் துர்க்ருத்ய மான செய்கையில் சஞ்சலமும் சந்தேகமும் பிறந்து, அது நாளைக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. அந்த உத்தமி தன் பர்த்தா வுக்குத் தன்னால் எம்மட்டும் கூற சாத்யமோ அம்மட்டும் மிக்க

கிண்டி ரேஸில் பணத்தைச் செலவிட்டு வயிறெரிந்து திரும்பிவரப் போகும் பிற்காலத்திய நிலைமையை அறியாத சில மனிதர்கள் பணங் கட்டுவ தற்காகக் கும்பல் கூடி குதூகலமாகப் பேசிக் கிண்டிக்கு வண்டி ஏறிச் செல் லும் கொண்டாட்டத்தை என்ன வென்பது? பிறகு கைவரண்டு திண்டாடும் போதல்லவா அந்த வருத்தம் தெரியும்!

வணக்கத்துடன் கூறத் தொடங்கி, "நாதா! நமது ஜாதி என்ன, குலமென்ன. நமது கௌரவமான குடும்ப வரலாறென்ன. இவ்வித மிருக்கையில் நீங்கள் அடிக்கடி அந்தத் தாசி வீட்டிற்குச் செல்வது அழகில்லை. வேண்டாம் வேண்டாம் என்று நான் வெகுவாய்த் தடுத்து இத்தனை நாட்களாகக் கூறியதெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விட்டது. உங்களுடைய விஷயம் இப்பொழுது எனக்கு நன்ருக வெட்டவெளியாகி விட்டது. அநியாயமாக தாசிவீடு செல்வது வேண்டாம். நாட்டில் நாலுபேர் நம்மைப் பார்த்து நகைப்பார்கள். கேட்டோர் வெறுத்து விலக்குவார்கள். நீங்கள் செய்யும் அநியாயம் உங்களுக்குத் தெரியாவிடினும் எனது வார்த்தையைக் கேட்டேனும் இவ்வீன ஒழுக்கத்தை விடுங்கள்" என்று எவ்வளவு வினயமாகக் கூறினும் அந்த மொழியைச் சற்றும் செவியிற் கொள்ளாது கிருஷ்ணன் பேசாமலே போய் விடுவான்.

பிறகு ரங்கமணி அந்த தாசியின் வீட்டிற்கே சென்று "ஏனம்மா பாஷிணி! இங்கு எங்கள் வீட்டு ஐயர் அடிக்கடி வருகிருரே, எதற்காக? அவரை இங்கு வர விடாதே. வர வேண்டாமென்று நீ சொல்லிவிடு. அவருடைய பந்து மித்திர ஜனங்களெல்லோரும் அவரைத் திட்டுகின்ருர்கள். அவர் குடும்பத்தையே கவனிப்பதில்லை. அவரை விலக்கிவிடு" என்று மனக் கொதிப்புடன் கூறினள். அதற்கந்த தாசி தான் அவரை அழைப்பதில்லை என்றும் அவரும் இங்கு அதிகமாக வருவதில்லை என்றும் தனது மாமாவுடன் ஏதோ பேசும் பொருட்டு வருவதாயும் கூறி யனுப்பிவிட்டாள்.

ரங்கமணி அன்று முதற்கொண்டே தன் நாயகனை எவ்வழியிலாவது திருப்பி இத்துர்ப்பழக்கத்தி லிருந்து மீட்கவேண்டுமென்னும் பெரும் விரதங் கொண்டாள். அதற்கான வழியிலேயே அவள் மனம் சென்று ஆராய்ந்து கொண்டிருந்தது. ஒரு தினம் ஏதோ முக்

பிடிவாத குணமுடைய மனிதர்களில் சிலரின் பிடிவாதம் தனக்குக் கிட்டாத பொருள் மீதே—வெகு காலத்திற்குப் பிறகு கிடைக்கக் கூடிய பொருள் மீதே—சென்று நிற்கின்றது. அத்தகைய பிடிவாதமான உறுதி கதர் கட்டுவதிலும் தேச உணர்ச்சியிலும் இருந்தால் நாட்டிற்கு எவ்வளவு நன்மை ஏற்படும்?

ய காரணமாக க்ருஷ்ணனிடம் ரங்கமணி ஒரு காரியத்தைத் தெரிவிக்க, அதற்கு க்ருஷ்ணன் தான் அவசரமாக அன்று ஆபீஸ் விஷயமாக எங்கேயோ செல்லவேண்டுமென்றும், ஆகையினால் முடியாதென்றும் தடை கூறிவிட்டான். இந்த மொழியைக் கேட்ட ரங்கமணி அப்படியே வேறு பதில் பேசாது சென்று ஓரிடத்தில் மறைந்திருந்து எங்கே அவன் செல்கிறான் என்பதை வெகு சிரத்தையுடன் கவனிக்கலானாள்.

க்ருஷ்ணன் மேல் வேஷத்திற்காக ஆபீஸ் உடைகளை அணிந்துகொண்டு இப்புறம் பார்த்துக் கொண்டே அமிர்தபாஷிணியின் வீட்டிற்குள் நுழைந்தான். இதைக் கண்ட ரங்கமணியின் வயிறு பற்றியது. "ஆபீஸ் காரியம்" என்று பொய்யுரைத்துச் சென்றானல்லவா? ஆகட்டும், என் பதியை நல்வழியில் திருப்புவதற்கு நான் முதலில் அவருக்கு எதிரியாகித்தான் தீரவேண்டும். அதனால் யாது வரினும் வரட்டும். என் மனதைப் புண்படச் செய்வதோடு குழந்தைகளையும் குடும்பத்துச் செலவுகளையும் அடியோடு கவனியாது இத்தகைய அநியாயம் செய்யும் மனிதரிடத்தில் நாம் நயமாகச் சொல்லிய மொழிகள் யாவும் கடலில் கரைத்த கற்கண்டாயது. இனி அம்முறையில் சிறிதும் பயனில்லை. அவரை எந்த விதத்திலாவது திருப்பிவிட நான் எடுத்துக்கொண்ட விரதத்தை நிறைவேற்றி விடுவதே சரி" என்று மனதில் பலவிதமாக எண்ணியவளாய் க்ருஷ்ணன் சென்ற அரை மணிக்குள் ரங்கமணி, அத் தாசி வீட்டிற்குச் சென்றாள். அந்த தாசியின் வீடு நேர் எதிர் வீடாகையினாலும் அவர்களுக்கும் ரங்கமணிக்கும் அடிக்கடி போக்குவரவும் பேச்சும் உண்டாதலாலும் அவள் தாராளமாக அவ்வீட்டிற்குள் நுழைந்து 'அம்ருதபாஷிணீ' என்று அழைத்தாள்.

அப்போது திருட்டு க்ருஷ்ணனும், புரட்டுத் தாசியும் வெகு குதூகலமாகவும், மிக்க ஆநந்தத்துடனும் பேசிக்கொண்டிருந்தார்க

ஒரு காரியத்தை உத்தேசித்து ஒரு இடத்திற்குப் புறப்படுகையில் பிறர் வேண்டாமென்று தடுத்தும் அவ்விடத்திற்குச் சென்றால் அங்குக் காரியமும் ஆவதில்லை. மன உத்ஸாகமும் இருப்பதில்லை.

ளாகையினால் இந்தக் குரல் அவர்கள் காதில் நாராசம் போன்றும் பேரிடி முழக்கம் போன்றும் விழுந்தது. க்ருஷ்ணனுக்குக் குலை நடுக்கம் உண்டாகி விட்டது. க்ருஷ்ணனைவிட ரங்கமணி புத்தி விசாலத்திலும் மற்றைய குணங்களிலும் சிறந்தவளாகையினாலும், பிடித்த பிடிவாதத்தை எக்காரியத்திலும் சாதிக்கவல்ல தைரியத்தையுடையவளாகையினாலும், அவள் தன் விஷயத்தில் என்ன செய்து விடுவாளோ என்ற பெரும் பயத்தினாலும் க்ருஷ்ணன் அவளிடத்தில் உள் நடுக்கத்துடனேயே நடப்பது வழக்கம். ஆகையினால் இன்று அவளுடைய மாசற்ற தொனியைக் கேட்டதும் மிக்க நடுக்கமுற்று, "ஐயோ! என்ன செய்வேன்; இவள் மகா வீராவேசம் பொருந்திய காளியாயிற்றே! நான் இவளுக்கு ஏதோ பொய்யுரைத்து எங்கேயோ செல்வதாகக் கூறிவிட்டு இங்கு வந்ததை யறிந்து இவள் என்னைச் சோதிக்கும் பொருட்டாகவே வந்திருக்கிறாள். ஆகையினால், இப்போது என்னை எவ்விதம் தப்பிக்கச் செய்கிறாய்" என்று அதிக பயத்துடன் கெஞ்சினான்.

இதைக் கேட்ட அமிர்தபாஷிணி நகைத்துக் கொண்டே "சரி இப்போது தாமதம் செய்தல் கூடாது. நீங்கள் இந்தக் கட்டிலின் கீழ் ஒளிந்து கொண்டிருங்கள். நான் நித்திரை செய்வதுபோல படுத்திருக்கிறேன். பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம்" என்று கூறி க்ருஷ்ணனைக் கட்டிலின் கீழே புகுந்துகொள்ளச் செய்து, தான் கட்டிலின் மேல் நித்திரை செய்பவள் போலப் படுத்துக் கொண்டாள். வெளியிலிருக்கும் ரங்கமணி மீண்டும் "பாஷிணீ! பாஷிணீ!" என்று இருமுறை அழைத்தாள். ஒருவிதமான பதிலும் கிடைக்காமையால் தட தட வென்று பாஷிணியின் சயன அறைப் பக்கம் சென்று பார்த்தாள். அங்கு பாஷிணி நித்திரை புரிவதே போலப் படுத்திருப்பதைக் கண்டு, பேசாமல் வந்து கூடத்தில் உட்கார்ந்தாள். "இங்கு வந்த மனிதர் இதற்குள் எவ்விதம் மறைந்து விடு

பணத்தைக் கண்ணில் காட்டாது வேலை வாங்கிக் கொள்ளும் தந்திரிகள் வெகு பேர்கள். அவர்களிடம் ஏமாறும் பேர் வழிகளோ சிலர் தான், அந்தச் சிலரிடத்தில் நயமாகப் பேசித் தலையைத் தடவி வேலைக்கு வரும்படியாக வெகு சுலபத்தில் செய்து விடுகிறார்கள்.

வார்? நாம் இன்னும் சற்று நேரம் இருந்து பார்ப்போம்" என்று எண்ணி வாளாவிருந்தாள்:

அப்போது அம்மாது நித்திரை நீங்கி எழுபவள் போன்று எழுந்து "அம்மா! காப்பி!" என்று கேட்டவாறு கூடத்திற்கு வந்தாள். கூடத்திலிருக்கும் ரங்கமணியைக் கண்டு "ஆகா! எப்போது வந்தீர்கள்! என்னை எழுப்பலாகாதா?" என்று கேட்டவாறு அவளருகில் அமர்ந்தாள். இவளைப்பார்த்ததும், ரங்கமணி அவள் கண்ணின் ஒளியிலிருந்தும் குரலின் ஓசையிலிருந்தும் இவள் உண்மையில் துயில் புரியவில்லை என்பதை ஊகித்தறிந்து கொண்டாள். பிறகு பேசத் தொடங்கி, "இங்கு நான் வந்து ஐந்து நிமிடமாகிறது. இங்கு என் பர்த்தா வந்தார். அவரைத் தேடிக்கொண்டுதான் நான் வந்தேன். எங்கே யவர்? கூப்பிடு" என்று சற்று வாட்டமும் கோபமும் கொண்ட முகத்துடன் கூறினாள்.

இது கேட்ட பாஷிணி, "உங்கள் பர்த்தாவா! இங்கு வரவில்லையே! நான் தூங்கி இப்போதுதானே எழுந்து வருகிறேன். அவர் இங்கு எதற்கு வருகிறார்? வரவில்லையே! நீங்கள் யாரைப் பார்த்துச் சொல்கிறீர்களோ! அவரை நான் பார்க்கவே இல்லை" என்றாள்.

ரங்கமணி:—ஆமாம்! நீயப்படிச் சொல்ல வேண்டியதுதான் கடமை! நான் வெகு நாள் வரையில் உன்னைப் பரமயோக்யை என்றே எண்ணி மோசம் போனேன். என் குடிக்கே நீ உலை வைத்து விடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. நீ எத்தகைய வேஷம்போட்டாலும் உன் சாதியின் புத்தி உன்னை விட்டகலுமா? குடும்ப ஸ்திரீகளின் வயிற்றெரிச்சலைக் கிளறும் தூண்டுகோலும் காற்றும் எண்ணெயுமாக விளங்குவது உங்கள் ஜாதியினரின் தொழிலல்லவா? உங்கள் ஜாதியின் அவகேட்டைத் தெரியாதார் யாரேனும் உண்டா? உங்கள் குலத்திலுதித்த நங்கைகளில் ஆயிரத்திற்கு

ஒரு மனிதரின் சமயா சமயத்தை அறியாது பீடிக்கும் அறிவிலிகள் அநேகர். அவர்களுக்கு ஏதேனும் சாக்குப் போக்குக் கூறிவிடின் விபரீதமான கோபமும் மனஸ்தாபமும் உண்டாகி விடுகின்றது. எருதின் புண்ணைக் காக்கை யறியுமா?

ஒன்று, பொறுக்கி எடுத்தாற்போல ஒரு புண்யவதி அகப்படுவது அரிது. அம்புஜத்தைப் போன்ற உத்தமியின் நடக்கையைக் கண்ட பிறகாவது உங்களுக்குப் புத்தி வருமா? ஏது, பணம் பிடுங்கும் பேய்களல்லவா உங்கள் இனத்தினர். நீயும் தற்போது அவ்வாறே ஆய் விட்டாய். இங்கு என் புருஷர் வந்ததை நான் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கையில் இல்லை என்று ஏன் பொய்யுரைக்கிறாய்? எங்கே அவரைக் கூப்பிடு'' என்றாள்.

இந்தக் கடுமையான வார்த்தைகளைக் கேட்ட பாஷிணிக்கும் அவள் தாயாருக்கும் அதிக கோபம் வந்து விட்டது. அவர்கள் ரங்கமணியிடம் வாதிட்டுச் சண்டைக்கு ஆரம்பித்து விட்டார்கள். ரங்கமணியும் இவர்களுடன் சலியாது சண்டையிட்டுப் பிறகு மன வெறுப்படைந்து வீடு திரும்பினாள். அன்று முதல் இவர்களுக்குள் விரோதம் வந்து விட்டது. ரங்கமணி வாஸுதேவனைப் பாஷிணி வீட்டிற்குப் போக விடுவதை நிறுத்திக் கொண்டாள். கட்டிலின் கீழ்ப் புகுந்த கள்ளன், மெல்ல வெளியில் வந்து பாஷிணியின் முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சித் தன் மனைவியின் கொடூர வார்த்தைகளை மனதில் வைக்கக் கூடாதென்று கேட்டுக் கொண்டு, அவள் கோபம் உடனே சாந்தமாகும் பொருட்டு, அன்று தனக்கு வந்த சம்பளத்தை (சட்டைப்பையில் வைத்திருந்ததில் 50 ரூபாயை) எடுத்து அவளிடம் கொடுத்தான்.

பணத்தைப் பறிக்கும் பரத்தையாகிய அந்த மோகனாங்கி, தன் கைக்கு வெகு எளிதில் கிடைத்த 50 ரூபாயைப் பெற்றுக் கொண்டு சம்பாஷணையை வேறு விதம் மாற்றிக் கொண்டாள். ரங்கமணியின் மனவெறுப்பும் கோபமும் மனத்திற்குள்ளேயே அதிகரித்து நாளுக்கு நாள் பொங்கலாயிற்று. தன் பர்த்தாவைத் தான் எந்த வழியில் திருந்தச் செய்யலாம் என்கிற ஒரு பெருங் கவலையும் அதற்கான யோசனையும் அவளை ஆட்கொண்டு விட்டன. தன்

பெண்டாட்டி பிள்ளைகளைக் கண்ணால் கண்டு பல மாதங்களாகி விடுகிறது. அவர்கள் சாப்பாட்டிற்குத் திண்டாடுவது கண்ணிலோ, மனதிலோ படுவதில்லை. வெளிப் படாடோபமோ அப்பப்ப அஸாத்தியம்.

பர்த்தா வேலை விஷயமாக வெளியிற் சென்றால் தான் வீட்டிலேயோ இருப்பது வழக்கம். ஒரு தரம் வெளியூருக்குக் கிருஷ்ணன் போகும் படியாக நேர்ந்து பிரயாணப் பட்டான். அச்சமயம் ரங்கமணி தானும் கூட வருவதாகக் கூறினாள்.

கிருஷ்ணன்:—சேச்சே! ஆபீஸ் விஷயமாகச் செல்லுமிடத்தில் உனக்கென்ன வேலை. நீ வேண்டாம், நான் மட்டும் சென்று திரும்புகிறேன். வாது செய்யாதே!

ரங்க:—ஆம்! ஆம்! நான் வருவதாகச் சொல்வதெல்லாம் சூதும் வாதும் செய்வது தான். பணத்தின் பொருட்டே உறவு கொண்டாடும் வேசையை அழைத்துச் செல்வதற்கு ஒரு விதமான தடையும் இல்லை பாருங்கள். நான் எத்தனை நல்ல தனமாகக் கூறிய போதிலும் உங்கள் செவியில் இப்போது படாது. அதன் பலனைப் பிறகு அனுபவிக்காது போகமாட்டீர்கள். நான் இம்முறை கண்டிப்பாக வருவேன்.

கிருஷ்:—இதென்ன பிடிவாதம்? நானா அவளை அழைத்துச் செல்கிறேன்? வெகு நன்றாயிருக்கிறது. இவ்விதமான அபவாத வார்த்தைகளைக் கூறாதே! உம்; போ.

ரங்க:— வீண்வம்பு எதற்கு? நான் கட்டாயமாய் வருவேன். நீங்கள் என் கண்ணில் மண்ணைத் தூவிவிடப் பார்ப்பது சற்றும் முடியாத காரியம். நீங்களும் அந்த தேவடியாளும் எங்கெங்கு செல்கிறீர்கள், என்னென்ன செய்கிறீர்கள் என்ற விஷயங்கள் எனக்குத் தெரியாமலில்லை. வேசி வசப்பட்டு மோசம்போன மூடர்களின் கூட்டத்திற் சேர்ந்த உங்களுக்கு அதன் உண்மை இப்போது தெரியாது. விவாகத்திற்குப் பெண்ணை வைத்துக் கொண்டு இவ்வித அநியாயத் தொழில் புரிந்து கொண்டு வந்தால் உங்களுக்கு மதிப்பும் கௌரவமும் ஏற்படுமோ? எவர்தான் உங்களிடம் சம்பந்தம் செய்ய வருவார்கள்? கன்னிகாப்பெண்ணை வைத்துக் கொண்டிருக்

முக்கியமான காரியத்தை முன்னிட்டு ஓரிடத்திற்குச் சென்றால் அங்கு வரும் மனிதரின் எண்ணிக்கையோ கூறத் தரமன்று. இதனால் எவருக்கும் வேலையான பாடில்லை.

கும் மற்றவர்களைப் பார்த்தேனும் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டாமா? உலகத்தில் சாதாரண நிலைமையிலுள்ளவர்கள், தாம் சம்பாதிக்கும் பொருளில் தம் குடும்பச் செலவை வெகு சிக்கனமாகச் செய்து அதிலும் ஒரு சிறு தொகையை மிச்சப்படுத்திப் பெண்களின் விவாகத்தின் பொருட்டு உபயோகப்படுத்துகிறார்கள். நீங்களோ சம்பாதிக்கும் பொருளை வேசிக்குக் கொட்டிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுதான் சமுசாரிகளின் ஒழுங்கான முறையா? குடித்தனப்பாங்கா? உங்கள் செய்கையை நீங்களறியாதிருப்பினும் பிறர் எடுத்துரைப்பதை யாகிலும் கேட்டு நடக்க வேண்டாமா? பெண்குழந்தை நாளுக்கு நாள் வளருகிறாள். அவள் இப்போது பால்யை யானாலும் வெகு சீக்கிரத்தில் வளர்ந்து விடுவாள். இப்பொழுதிருந்தே அவள் பேரால் ஒரு பண்டு, அல்லது சீட்டு கட்டிக்கொண்டு வந்தால் விவாக காலத்தில் வெகு சுலபத்தில் பணம் கிடைத்துச் சிரமமின்றி விவாகத்தை நடத்தலாம். வீட்டுச் செலவைக் கவனியாமலும், இனிப் பெண்ணுக்கு விவாகம் செய்ய வேண்டிய ஒரு பெரும் பாரத்தை நினைக்காமலும் இவ்விதம் பற்று என்பதே இல்லாமல் திரிந்தால் என்ன செய்வதென்று நினைக்கிறீர்கள்? 'எத்தகைய உயர் குடும்பத்தில் பிறந்து தாசி லோலனாகத் திரியும் இவன் மகளை யார் கட்டுவார்கள்' என்று நகைத்துக் கூறும்படியாக வன்றோ நீங்கள் செய்கிறீர்கள்.

க்ருஷ்:—ரங்கமணி! நீ வீண்பேச்சுப் பேசாதே! உன் வாய் தினம் அதிகமாக கொட்டி யளக்கிறது. அதைச் சற்று அடக்கு; எனக்கு எல்லாம் தெரியும்.

ரங்கமணி—அடா டா டா! உங்களுக்குத் தெரியாதது உலகத்தில் ஒன்றிருக்கிறது. தெரிந்து தான் இவ்விதம் என் வயிறெரியச் செய்கிறீர்கள். நான் வாய்ப்பேச்சை உங்களுடைய நன்மைக்காகக் கொட்டியளக்கிறேன். நீங்கள் யாருடைய நன்மையைக் கோரியோ, அன்றி எல்லாந் தெரியும் என்கிற மமதையினாலோ பணத்தை அந்

அன்பை அன்பே அறியும். உள்ளன்பின் தன்மையே தனித்தது. உள்ளன்பு அற்ற மனிதர்களின் மேற்பூச்சான வேஷம் அவர்களின் நடக்கையிலேயே நன்றாகத் தெரிந்து விடுகின்றது. உண்மையின் மதிப்பு உயர்வுதான்.

தப் பாத்ரதைக்குக் கொட்டியளக்கின்றீர்கள். இது வெகு நியாய மான செய்கையல்லவா? ஒரு மனிதன் தனக்குள்ள மதிப்பைப் போக்கிக் கொள்ளா திருக்கவும், தன் சொந்த உழைப்பினுல் மேன் மேலும் புகழடையவும் தன் குடும்பத்தைச் சீர்குலையாது காக்கவும் பாடு படுவான். உங்களுடைய ராச்சியத்தில், உள்ளதையும் இழந்து கள்ளன் போன்று விழித்துக் கொண்டிருக்கும் படியாக சாஸ்திரம் முறையிடுகின்றது. எத்தனை விதமாக எல்லோரும் தம் குடும்ப போஷணத்தைப் பார்த்துக் கவனிப்பார்களோ அதற்கு நேர்மாருக நீங்கள் குடும்பத்தைக் கவனியாது திரிகின்றீர்கள். இந்த அநியா யம் எந்த விடத்தில் நடக்கும்?

கிருஷ்ண:—என்னடா இது. சனியன் போன்று பிடித்துக் கொண்டாள். 5-6-வயது கூட நிரம்பாத இந்தப் பெண் குழந்தையை வைத்துக்கொண்டு விவாகமாம், சம்பந்தமாம், வெகு அழகு. அவ ளுக்கு விவாகத்திற்குக் காலம் வரும்போது அதற்குத் தக்கபடி நடக்க எனக்குத் தெரியும். வீணே என்னைத் தொந்தரவு செய்யாதே.

ரங்கமணி:—பேஷ்! வெகு அக்கரையுடன் வார்த்தையாடு வதைப் பார்க்கும்போதே எத்தனை அழகாக இருக்கிறது. பெண் குழந்தை 5-6-வயதினளாகத்தானிருக்கிறுள். அந்த வயது அப் படியே தான் நிலைத்திருக்கும். இனிமேல் அவளுக்கு வயதாகுமா! வளருவாளா! விவாகத்திற்கு வேளை வருமா! ஒன்று மில்லை பாருங்கள். நீங்களும் இவ்விதமே சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்தி வேலையையும் போக்கிக் கொண்டு கடனாளியாகி, வேசி வயப்பட்டு நாசமாகி விட்டால் பிறகு எல்லாக்காரியங்களும் தலை கீழாக நடந்து விடும். எனக்கென்ன குறைவு. குழந்தைக்கு நல்ல வரனுக் கிடைத்தால் எப்போதுதான் விவாகத்தைச் செய்யலா காது? எப்போதும் முன் எச்சரிக்கை இல்லாவிடின் என்ன செய்வது? நீங்கள் எந்த நேரமும் இவ்விதம் தாசியுடன் அலைவதை நான் இனி

வேலையற்றிருப்பதாக ஒருவரை நினைக்கின்றூர்கள். அந்த மனிதருக்கோ தனது போஜனத்தின் நிமித்தம் ஓய்வு கிடைப்பதும் குதிரைக் கொம்பாக இருக்கிறது- எதையும் தூர விருந்து நினைத்து விடலாகாது.

ஒருபோதும் ஒப்பமாட்டேன். நானும் மஞ்சுளாவல்ல. அவள் தன் கணவன் வேசி வீடு செல்லும்போது தானும் கூடச் சென்று பணி விடை செய்தாளல்லவா? அங்ஙனம் நான் நடப்பேனென்று நீங்கள் எண்ண வேண்டாம். நான் உங்களுடைய இத் தூர்த்தச் செயலை மாற்றும் விஷயத்தில் எதிரியாகவே இருந்து வேலை செய்வேன். தெரியுமா! என் மனம் பொறுமையை வகிக்கும் வரையில் நீங்கள் சுகப்படுவீர்கள். இல்லையேல் நான் அதற்குத் தக்க வழியில் வேலை செய்வேன். இன்று நானும் அந்த ஊருக்கு வருவேன். உங்களுக்கு நான் வருவதால் சுகமில்லை என்பது தெரியும்; எனினும் நான் வந்தே தீருவேன்.

க்ருஷ்ணன்:—இதென்ன வீண் வம்பு. இந்தப் போராட்டம் எனக்கு வேண்டாம். எனக்கு வேலைத் தொந்தரவு அதிக மிருக்கிறது. நான் செல்கிறேன். "நான் அடுத்த முறை செல்லும்போது உன்னையும் அழைத்துச் செல்கிறேன். நான் இம்முறை சென்று நாளையே திரும்புவேன். ஆகையினால் நீ பிடிவாதம் செய்யாதே" என்று கூறிக் கொண்டே போய் விட்டான்.

குறித்த நேரமும் சமீபித்தது. கிருஷ்ணன் பிரயாண சித்தமாகி ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு விட்டான். இவனுடைய கையாளாகிய குருசாமி என்பவனை ஏவி அமிர்தபாஷிணியை அழைத்துக் கொண்டு ரயிலடிக்கு வரும்படியாகக் கூறி அனுப்பினான். அவ்வாறே அந்த மாதரசியை அழைத்துக் கொண்டு வந்து குருசாமி வண்டி ஏற்றி விட்டான். க்ருஷ்ணன் இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏறினான். பாஷிணி முதலில் மூன்றாவது வகுப்பில் ஏறிப் பிறகு அடுத்த ஸ்டேஷனில் இறங்கி இரண்டாம் வகுப்பு வண்டிக்கு வந்து விடுவது வழக்கம்; அதேபோல அன்றும் ஏறினாள். இரயில்

'இன்று சரியாக நான்கு மணிக்கு வருகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சிலர் வாராமலிருக்கிறார்கள். அவர்களை எதிர் பார்ப்பவர்கள் தமது சகலமான வேலைகளையும் நிறுத்திவிட்டு எதிர் பார்த்துப் பார்த்துக் கண் பூத்து, மனம் சலித்து, ஏங்கிவிட நேர்கின்றது. சொன்னவர்களோ தாம் சொல்லியதையே மறந்து விடுகிறார்கள் போலிருக்கிறது.

ஊளம்பி விட்டது. அடுத்த ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது வழக்கம்போல க்ருஷ்ணன் இறங்கி பாஷிணியை அழைத்துச் செல்ல, அவளிருக்கும் வண்டியருகில் வருகையில் அதற்கு மத்தியி லுள்ள வண்டியில் ரங்கமணி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து நடுங்கித் திடுக்கிட்டுப் போய் "ஹா! இவள் எவ்வாறு இங்கு நம்மை யறியாது வந்து விட்டாள்" என்று நினைத்துத் திகைத்து நின்று விட்டான். அதே சமயம் வழக்கம் போல பாஷிணி தன் வண்டியிலிருந்து இறங்கித் தன் யாழ்போன்ற குரலால், "என்னுங்கோ! நான் இதோ இருக்கிறேன். என் அங்கே நிற்கிறீர்கள்.?" என்று கேட்டவாறே நடக்கலானுள். இந்தக் குரலைக் கேட்ட க்ருஷ்ணன், இன்னது செய்வ தென்று தெரியாது கதி கலங்கிப்போய் நின்று விட்டான்.

———

8—வது அதிகாரம்

மகளின் சரிதை—மாதாவின் துயரம்

"அம்மா! என் விஷயத்தை நானே எடுத்துக் கூறுவதென்றாலும் பயமாக விருக்கிறது அதோடு உன் மனம் தாங்காது தவிக்கும் இவைகளை எல்லாம் கேட்காதிருப்பதே நலம் என்றுந் தோன்றுகின்றது" என்று ஓர் மாது (நடுத்தர:பருமனும் அதற்கேற்ற உயரமும் சாதாரண மான எழிலும் கூடிய மடந்தை) தன்னெதிரிலுள்ள தனது அன்னையை நோக்கிக் கூறினுள்.

இது கேட்ட அவளுடைய அன்னை மிக்க விசனத்துடன் கண்ணீர் பெருகியவாறு பேசத்தொடங்கி, "என் செல்வி! திலோத்

நாம் யாருடன் அந்தரங்கமாகத் தனிமையில் பேச நினைத்து எதிர் பார்க்கி ரூேமோ அவர்களுடன் ஒரு வால் போன்று யாரேனும் வந்து விடுகிருர்கள். அன்றைய ஆநந்தமான பேச்சுக்கு அழிவு உண்டாகி விடுகிறது.

தமா! உனக்கு எத்தனையோ அருமையான பெயரிட்டுப் பெருமை யாக வளர்த்தேன். நம்முடைய ஏழ்மை நிலையின் கொடுமையில் உன்னை இந்த ஆழம் தெரியாத பள்ளத்தில் காலிட்டுக்கொள்வது போலத் தள்ளிவிட்ட நேர்ந்தது. உனது சிறு பிராயம் முதல் உனக்கு நல்ல வரன் தேடிக் கொடுப்பதற்கு நான் பட்ட சிரமமும் வருத்த மும் கூற வியலாது. திடீரென்று உன் தந்தை உயிர் நீக்கவும், நாம் ஆதரிப்பாரற்று ஏழையாகி விடவும் உன் அம்மான்மார் வீட் டில் காலங் கழிக்கவும், அப்போது உனக்கிந்த விவாகம் ஆகவும் எல்லாம் எண்ணியதற்கு நேர் விரோதமாக நடந்தேறிவிட்டன. நான் என்ன செய்வேன்? உன்னை விவாகமில்லாமலேயே கன்னி கையாக வைத்திருக்கலாகாதா என்று இப்போது இரவு பகலாக எண்ணி உருகுகின்றேன். என்னுடைய பிறவியில் எனக்கு இத் தகைய காலம் வரும் என்று நான் நினைக்கவில்லை. எல்லாம் விதி செய்யும் கூற்று. வழியோடு சென்ற தடியனை, உன் அத்தை பார்த்து வாவென் றழைத்து வந்து உன்னை வலுவில் அவனுக்குத் தள்ளச் செய்வானே! வயதிலும் பெரியவன். யோக்யதையிலும் சிறிய வன். வேலையும் அற்றவன். இவன் உண்மைச் சரிதையை அறி யாது மோசம் போய்விட்டோமே. என் வயிறு பற்றி எரிகின்றதே! இப்போது வந்து நேர்ந்த கதியைத்தான் கூறு கேட்போம். இத னல் எனக்குப் புதிய வருத்தம் யாது மில்லை'' என்று வெகு கனி கரத்துடன் கேட்டாள்.

திலோத்தமா:—அம்மா! நாம் மிகவும் ஏழ்மையான நிலை மையில் இருந்தபோது நான் அடைந்த சந்தோஷமும் குது கலமும் எனக்கு இந்த விவாகமாகிய பிறகு அறவே ஒழிந்த தென்றே கூறலாம். இந்த ஒரு வருடமாக என்னை நீங்கள் அங்கு

சிலருக்குப் பிறர் வீட்டிலேயே இருப்பதற்கு நினைவு. அவ்விடத்திலேயே இருந்து, உண்டு, உறங்கி அவ் வீட்டுக்காரர்களுக்குப் பெரிய தொந்தரவை உண் டாக்கி விடுகிறார்கள். 'இவர்கள் எங்கேனும் சற்றுத் தொலையமாட்டார்களா'' என்று வீட்டுக்காரர்கள் நினைக்க, அவர்களோ வீட்டுக்காரர்கள் எங்குச் செல்கி றார்களோ அங்கெல்லாம் தாமும் கிளம்பி விடுகிறார்கள். இதென்ன மவுட்டீகத் தன்மை!

விட்டுவைத்தனால் நான் இச்சிறு வயதில் அநேக அனுபவங்களை நானே பட்டு அறிந்துகொண்டேன். என்னுடைய தினசரி விஷயங்களே ஓர் அனுபவ ஞானத்தை ஊட்டும். நான் அவர்களோடு சென்றதும், சில நாள் வரையில் என்னை வெகு இன்பமாகவே நடத்தினார்கள். என் புருஷனும் மாமியாரும் உலகத்தவர்களைப் போலவே நடந்துகொண்டார்கள். நானும் அதுவரையில் எவ்வளவோ சந்தோஷமாக இருந்தேன். இம்மாதிரியான காலம் சில காலமே யன்றி துயருறுங் காலமே பெரிதாகிவிட்டது. அம்மா! நான் சிறுமியாக விருப்பினுங்கூட என் கடமையில் சற்றும் குறைவில்லாமலேயே நடந்துகொண்டேன். என் பர்த்தாவும் என்னுடன் இன்பமாகப் பேசி என்னைப் புத்தி யறிந்த பெண்ணாகவே மதித்துச் சகல விஷயத்திலும் அவ்வாறே நடக்கத் தலைப்பட்டார். நான் என்னால் கூடிய மட்டில் அவர் முகங் கோணாது நடக்கவே முற்பட்டேன். அவருடைய மதியீனமான செய்கையினால் அடிக்கடி என் உடம்புக்கு வியாதி வரத் தலைப்பட்டது. அன்பாக நடத்தியதெல்லாம் சிறுகச் சிறுக துன்பமாக மாற வாரம்பித்தது. வீட்டு வேலைகளையும் என் கைப்படவே செய்யத் தூண்டினார்கள். அதையும் நான் தட்டாது வெகு சுருசுருப்புடனேயே செய்து வந்தேன். என்னுடைய இந்தச் சிறிய வயதில் நான் பலவிதத்திலும் ஓர் சம்சார நிர்வாகியாகவே ஆகிவிட்டேன். என் புருஷனுக்கு வேலை இருப்பதாயும் மாதம் 50 ரூபாய் சம்பள மென்றும் நம்மிடம் விவாக காலத்தில் தெரிவித்த யாவும் சுத்த பொய் என்பதையும் அறிந்தேன். அம்மா! நான் இங்கு சிறியவளாக இருக்கையில் நீ என்னை அடிக்கடி நோக்கி "திலோத்தமா! பொறுமையை இழக்காதே! பொறுமைதான் மனிதரைக் காப்பாற்றும்; பொறுமையைக் கைவிடாதே; பொறுமைதான் மனிதரைக் காப்பாற்றும். பொறுமையற்றால் சிறுமை தான் ஏற்படும். பெருமை குறைந்து வறுமை மிகுந்து பலவிதத்திலும் கேடுதி தான் சம்பவிக்கும். உன்னை யார் என்ன சொல்லியபோதிலும் வருந்தாதே! மனத்தில கலக்கமும் கொள்ளாதே! உன்னைக் காக்கும் கடவுள் ஒருவன்தான் சதமென்று நினைத்துக்கொள். இலவசப் பாடசாலையில் சண்டையிட்டுக்கொள்ளாது படித்துப் பயனடை" என்று நீ கூறியதை நான பசுமரத்தாணி போன்று மனதில் கொண்டுளேன். என்னுடைய

சிறிய வயதாக விருப்பினும் பிறரிடம் கிரகிக்கவேண்டிய சங்கீத சாரத்தைக் கிரகிக்கும் வரையில் அவர்கள் வீட்டிலேயே கிடப்பது.; தன் வேலை முடிந்த பிறகு அவர்களை மதிப்பதே இல்லை. தந்திரப் புலிகளின் திருவிளையாடல்களை என்னென்பது!

தினப்பொழுதில் அந்த வாக்கியங்களை நினையாத நேரமில்லை. எனக்குப் பொறுமையைக் கடவுள் அளிக்கும் வரையில் கையிழப்பதில்லை. என்னவிதம் காலக்ஷேபம் நடக்கின்றதென்று எனக்கே தெரியாது யோசித்தேன். என் மாமியார் என்னைப் பக்ஷமாக நடத்தியது இரண்டே மாதந்தான். அவ்விரண்டு மாதங்களும் கடன் வாங்கியே காலத்தைக் கடத்தினர்கள். பிறகு கடன்காரர்கள் உபத்திரவிக்கையில் நான் தெரிந்துகொண்டேன. எனது மேனியிலுள்ள ஆபரணத்தை ஜாக்கிரதையாகத் தான் பெட்டியில் வாங்கி வைத்திருப்பதாக என்னிடம் கூறி வாங்கி வைத்தாள். அவ்வாறே அவைகளை நானும் கொடுத்தேன். பெட்டியில் வைப்பதாகக் கூறிய வளைத்தும் பொய்யென்று பிறகு தெரிந்துகொண்டேன். என் கை வளையலைக் கடனுக்காக விற்றுக் கொடுத்துவிட்டாள். அதைக் காணவில்லை, கள்ளன் கொண்டுபோய் விட்டதாய்ப் பிறகு கூறிவிட்டாள். என்னுடைய நகையைப் பற்றி நான் சற்றும் கவலை கொள்ளவில்லை. என் பர்த்தா என்னை நடத்திய இம்சையைத் தாங்கமாட்டாமல் என்மேனியே வாடத் தலைப்பட்டது. அடிக்கடி ஜுரம் வந்து கொண்டே இருப்பதும், சற்றுக் குணமானதும் மீண்டும் என்னை உபத்திரவித்ததால் திரும்பவும் படுப்பதுமாக ஆய்விட்டது. எனது அந்தரங்கத்தில் நடக்கும் விஷயம் மாமியாருக்குத் தெரிந்திருந்தும் அந்தம்மாள் தனக்கு யாதும் தெரியாது போல நடந்துகொண்டு நான் உடம்பு சரியில்லாது படுப்பதெல்லாம் வேலை செய்ய வேண்டுமே என்கிற சோம்பலினாலேயே நான் படுத்துவிடுவதாகக் கூறித் திட்டுவாள். எழுந்து நடக்கவும் சக்தியற்ற நான் என் தேக நிலைமையுடன் என்னால் கூடியவரையில் உழைப்பதும் மீண்டும் படுப்பதும் இப்படியே இருந்தேன். எங்கள் ஜீவனத்திற்கே வெகு கஷ்டமாகிவிட்டதால், என மாமியார் ஒரு பெரிய மனிதர் வீட்டில சமயல் செய்ய ஒப்புக்கொண்டாள. அதை வெளிப்படையாக என்னிடம் தெரிவிக்காமல தனக்கு யாரோ உறவு முறை இருப்பதாயும் அவர்கள் வீட்டில் விவாகம வரப்போவதாயும் அதற்காக ஒத்தாசைக்குத் தன்னை குடும்பத்துடன அழைப்பதாயும் கூறி என்னையும் அவ் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள.

அக்குள்ள சகலமான வேலைகளையும் என்னைச் செய்யும்படியாகக் கூறியதுடன் தானும் செய்வாள். நான் அந்த வீட்டிற்குச்

வினா:—சமுசாரத்தில் கடன் மிஞ்சி விட்டதே என்ன செய்வது. அடைப்பதற்கு ஒரு வழி சொல்லேன்?

விடை:—இந்த மனைவியின் பேரில் ஏதேனும் குற்றங்கள் கண்டு பிடித்து இவளை விலக்கி விட்டு வேறு விவாகம் செய்து கொண்டால் வரதக்ஷிணையின் தொகையினால் கடனைத் தீர்த்து விடலாம்.

சென்று பார்த்ததும், அவர்கள் சாமானிய மனிதர்கள் அல்ல; ஓர் பெரிய ஜமீந்தாரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று தெரிந்து கொண்டேன். அவர்கள் என் மாமியாரின் உறவினர் அல்லவென்பதை நான் தெரிந்து கொண்டேனெனினும் ஒருகால் உறவினராக இருக்கலாமோ வென்றும் சந்தேகித்தேன் அவர்கள் என்மீது வெகு பக்ஷமாகவே நடந்து கொண்டார்கள். என் மாமியார் அவ்வீட்டில் வேலை செய்யும் ரகஸியத்தையும் பிறகு நான் அறிந்தேன். அவ்வீட்டு மனிதர்களே என்னிடம் தெரிவித்தார்கள். இந்தப் பெரிய குடும்பத்தின் வேலையை நான் என்னால் கூடிய வரையில் காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரையில் செய்து பின் வீடு திரும்பினால் என் தேகம் பிணம் போலாகி விடும். என்னிலையே எனக்கிருக்கா தொழியும். அந்த நிலைமையில் என் பர்த்தா ஈவு இரக்கமற்று என்னுடைய கஷ்டத்தைச் சற்றும் பொருட் படுத்தாது **எருதின் புண்ணைக் காக்கை அறியுமா** என்ற முதுரைப் படிக்கு நடப்பார். அதற்கும் நான் என் பொறுமையை இழக்காது வகித்து வந்தேன். அவ்வாறே சில மாதங்கள் வரையில் வேலை செய்து உடம்பு மிகவும் மெலிந்து ஓய்ந்து போய் விட்டதால் எனக்கு எதுவுமே செய்ய முடியாமற் போய் விட்டது. அந்த நிலைமையிலும் நான் வேலை செய்துவிட்டு ஒரு நாள் வழக்கம் போல இரவு 11 மணிக்கு வீடு திரும்பினேன். இருட்டு கருக்கலாக இருந்தது. எங்கள் வீட்டிற்குப் போகும் வழியில் குளம் ஒன்றிருக்கிறது. அக் குளக்கரை பண்டையில் போகும்போது நான் பிரக்ஞையே யற்று கீழே விழுந்து விட்டேன்.

நான் அவ்வாறு விழுந்து கிடப்பதை யாருமே கவனிக்கவில்லை. எங்கள் வீட்டில் குடியிருக்கும் மாது அகஸ்மாத்தாகக் கண்டு என்னைத் தூக்கி நேரே ஆஸ்பத்திரிக்கு அனுப்பினாளாம். எனக்கு ப்ரக்ஞை என்பதே இல்லை. நான் எங்கே என்றாவது, நான் என்ன செய்கிறேன் என்றாவது என் பர்த்தாவும் மாமியும் கேட்கவே இல்லையாம். பிறகு வீட்டில் குடியிருப்பவர்களும் மற்றையோரும் "திலோத்தமா எங்கே?" என்று கேட்டதற்குச் சரியான படி முகங் கொடுத்துப் பேசாது போய் விட்டார்களாம். அதன் மேல்

வினா:—என் மனைவிக்கும் தாயாருக்கும் ஓயாமல் எப்பொழுதும் சண்டையாகவே இருக்கிறது. அவர்களைச் சமாதானம் செய்யும் வழி இன்னதென்று எனக்குத் தெரிய வில்லையே?

விடை:—உன்னுடைய வேலையை வெளியூருக்கு மாற்றிக் கொண்டு மனைவியை அழைத்துச் சென்று விடு. மாதம் இவ்வளவு ரூபாய் என்று தாயாருக்கு அனுப்பி அவளைப் பெண்ணிடத்தில் இருக்க ஏற்பாடு செய்து விடு.

அவர்கள் எவ்விதமோ விஷயத்தைத் தெரிந்து கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். எனக்கு அப்போது நல்ல ஜுரமாகையினால் அவர்கள் வந்தது எனக்குத் தெரியாது. எனக்கு வேளா வேளைக்குக் கஞ்சி கூட அவர்கள் கொண்டு கொடுப்பதில்லை. அம்மா! என்னுடைய இத்தனை அநுபவத்தில் என் மனதிற்குச் சற்று ஆறுதலும் சந்தோஷமும் அளிக்கக் கூடியவர்கள் துணைவிகளான ஸாவித்ரி, ரங்கமணி என்கிற இரு சகோதரிகள் தான். நான் வயதில் அவர்களை விட எவ்வளவோ சிறியவளாக விருப்பினும் அவர்கள் என்மீது ஒரு விதமான வாஞ்சை கொண்டு என்னைத் தமது சகோதரி போல நடத்தி வருகிறார்கள். எனக்கு எத்தனை துக்க மிருப்பினும் நான் அவர்களுடைய சத் சகவாசத்தினால் நிம்மதியாயும் சந்தோஷமாயும் பொழுதைக் கழிக்கின்றேன். அவர்கள் வீட்டிற்குச் செல்வதை மட்டும் என் மாமியும் பர்த்தாவும் தடுக்க வில்லை. அவர்கள் வீட்டுப் பரிசாரகன் எனக்குக் கொண்டு வந்து கொடுப்பான். இவ்விதமே ஆஸ்பத்திரியில் 5-6-நாள் படுத்திருந்து பின் வீட்டிற்கு வந்தேன். என்மீது ரங்கமணியும் சாவித்திரியும் காட்டும் அன்பைக் கண்டு என் மாமிக்குச் சற்று பொறாமை யுண்டாகத் தலைப் பட்டது. என் உடம்பு குணமாகி வீடு வந்தது முதல் மீண்டும் பழய படிக்கு வேலை என்னை வந்து சூழ்ந்தது.

என் மாமியாருக்கு தினே தினே வெறுப்பும் துவேஷமும் அதிகப் பட்டுக் கொண்டே வந்தது. அதன் பயனாக அவள் என்னையும் என்னைச் சார்ந்த உங்களையும் திட்டுவதையே பெருங் கங்கணமாகக் கொண்டாள். என்னை அவர்கள் என்ன திட்டியபோதிலும் வாய் திறந்து பதில் கூறக் கூடாது. வாய் திறந்தால் அந்த ஆவேசம் அதிகரித்து விடுகிறது. என் பர்த்தாவும் கூட சேர்ந்து கொண்டு என்னென்ன தோன்றுகிறதோ அவைகளை எல்லாம் கூறுவார்கள். இந்த வயிற்றெரிச்சலை விட என் மாமியாருக்குச் சாமி வருவது வழக்கமாம். தடபுடலாக “ஹா ஹூ” என்று கோஷம் செய்து ஆடிக் குதித்து அமர்க்களம் செய்வாள். அப்போது நான் முதல் தடவையில் பயந்து விட்டேன். பிறகு தினம் கண்டு சகஜமாகி விட்டது. அவளுக்கு அவ்வாறு வரும்போது நான் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டுமாம். அந்த சாமி எதைக் கேட்கிறதோ அவைகளை எல்லாம் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமாம். இல்லையேல் என் பர்த்தாவின் கோபத்திற்குப் பாத்திரமாகி விட

சங்கீத வித்வத் கோஷ்டியினரின் மத்தியில் பாட உட்கார்ந்ததும் சிலருக்கு அதிகமான பயத்தினால் எப்போதுமிருக்கும் சங்கீதமும் உள்ளடங்கி விடுகின்றது. சிலருக்கு அபரிமிதமான உற்சாகத்தினால் எப்போதும் பாடுவதைவிட வித்வான்கள் மகிழ்ந்து ஆனந்திக்கும்படியாக அமைகின்றது.

வேண்டும். அதற்காக அவர்கள் கூறியபடிக் கெல்லாம் ஆடுகிறேன். எனக்குள்ள மன வெறுப்பபையோ சுக துக்கத்தையோ நான் யாரிடம் கூறுவேன்? என்னரிய தோழிகளிடத்தில் தான் கூறுவதும் புலம்புவதும்.

அம்மா! இந்த வேடிக்கையை எல்லாம் விட வேறு ஒரு நூதன விஷயத்தைக் கேள்விப்பட்டு என்னுள்ளம் பொங்குகின்றது. நான் வீடு சென்ற நாள் முதல் என் பர்த்தாவும் அந்தம்மாளும் சொந்தம் தாயும் மகனும் என்றுதான் நினைத்தேன். பிறகு நாளா விருத்தியில் அவர்களின் செய்கையும், பழக்கமும், பேச்சும் எனக்குப் பெருஞ் சந்தேகத்தை யளித்து வந்தது. நாங்கள் வேலை செய்யும் வீட்டு எஜமானி என்னிடம் ஒருநாள் பேசுகையில், அவள் என் மாமியார் என்று நான் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினேன். அதைக் கேட்டு அந்தம்மாள் நகைத்து "அடி அசடே! அவளா உன் மாமியார்! உன் மாமியார் ஊரில் இருக்கிறாள். இந்தத் தடிச்சி உன் மாமியாருமல்ல. வேறு உறவு முறையுமல்ல. உன் புருஷன் இவளை இழுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டான். இவள் சிறிய வயதிலேயே விதந்துவானவள். இவள் உன் புருஷனைவிட வயதில் பெரியவளாகவிருந்தும் இவள் தன் கெடு மதியினால் அவனுடன் இசைந்து வந்து விட்டாள். இவள் கெட்டுப் போன முண்டை யல்லவா! நாங்கள் இந்த ரகஸியம் தெரிந்தவுடன் இவளைச் சமயல் வேலையிலிருந்து நீக்கி விட்டு வேறு வேலையல்லவா செய்யச் சொல்லி இருக்கிறோம். நீ மாமியாரென்று நம்பி மோசம் போகாதே. கிளிபோல் உன்னைப் பெற்று வளர்த்து இந்தப் பாவியின் கையில் கொடுத்து விட்டார்களே! அநியாயம்! பெண்ணைக் கொடுப்போர் நன்றாக விசாரித்துக் கொடுக்க வேண்டாமா! இவள் வேண்டுமென்று தான் தாய் என்றும், அந்த மடயன் மகனென்றும் வேஷம் போட்டு உன்னைக் கொண்டு வந்து விட்டார்கள். உன் தலை விதியிது" என்று இன்னும் என்னென்னவோ கூறினார்கள். அதைக் கேட்ட எனக்குச் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது எனக் குண்டான ஆச்சர்யத்திற்கும், துக்கத்திற்கும் மன வெறுப்பிற்கும் அளவே இல்லாது போய் விட்டது" என்று திலோத்தமா பேசிக் கொண்டே இருக்கையில் அவள் தாயார் இந்த அக்கிரம வார்த்தையைக் கேட்டு அபாரமான வியப்பும் திகைப்பும் கலக்கமும் அடைந்து, "என்ன! என்ன! அந்த தடிச்சி உன் மாமியல்லவா! கெட்டுப் போனவளா! உன் புருஷனுக்கு மனைவியா! ஐயோ! இதென்ன அக்கிரமம்! ஹா!" என்று கூறிக் கர்ஜித்தாள்.

எல்லா அம்சத்திலும் வெகு மேன்மை பொருந்தி இருப்பது மிகவும் கஷ்டம். அவ்வாறு பொருந்தியுள்ள புண்ணியமூர்த்திகள் சிலர்தானிருக்கிறார்கள். அத்தகையோரின் சந்திப்பும், சம்பாஷணையும் மனத்திற்கு பரமானந்தத்தை யளிக்கின்றது.

தபாற் செலவு

இனம்! இனம்!!

ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும் போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும் படி கேட்டுக்கொள்கிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்வதில்லை யாகையால், மற்றவற்றை அனுப்ப முடியா தென்று எழுதவேண்டி யிருக்கிறது. அநேக நேயர்கள், தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தக சாலையினின்றும் வரவழைப்பதென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரி யத்தையும் உத்தேசித்து இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கி யனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விவரமும், அவற்றின் முழு கிரயமும் முன் பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியு மாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நாலணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பியில் அனுப்ப முடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தாநேயர் களும், அவர்களது நண்பர்களும் தங்களுக்கு வேண்டிய சகல புத்த கங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலுமின்றி பெற்றுக்கொள்ள முடியு மென்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்.

மானேஜர்.

சிறந்த தமிழ் நூல்கள்.

தமிழ் நாவல்கள்.					
சிவஞானம்	ரூ 1	4	நமது பங்கஜம்	1	8
ஞானப்பிரகாசம்	1	8	பன்னீர் செல்வம்	1	0
ஞானசம்பந்தம்	1	4	சவடால் சம்பந்தம்	1	0
கமலாக்ஷி	1	12	தருமசீலன்	1	0
விஜயசுந்தரம்	2	0	இரத்னம்பாள்	1	0
காதம்பரி	1	8	பரிமளா	1	0
			மேகசந்தேசம்	0	14

நீல அரண்மனை	1	4	கனகமணி	2	12
விஜயபாஸ்கரன்	2	0	சந்திரரேகை	2	0
விக்கிரமசிங்கன் கோட்டை	1	0	பத்மாக்ஷி	2	0
ஷண்முகசுந்தரம்	2	0	கனகாங்கி	2	0
இருபடுகொலை	0	12	சுந்தரி மனோஹரன்	1	8
விஷத்தாம்பூலம்	0	12	மாயாசுந்தரி	0	12
பத்மாமணி	1	0	அமிர்தவல்லி	1	0
ரஸாயனக்கள்வன்	0	12	வைதேகி	2	8
அம்புஜாக்ஷி	2	0	பத்மசுந்தரன்	2	8
ஜகதீசன்	1	12	ராதாமணி	2	8
மஞ்சுளா	0	10	சாருலோசனா	2	8
காளிங்கராயன் கோட்டை	4	0	சண்பகவிஜயம்	1	12
விலாசவதி	3	0	கௌரிமுகுந்தன்	1	12
பவளத்தீவு	1	8	கோபாலரத்னம்	0	14
கல்யாணி	0	12	சுகந்தபுஷ்பம்	1	0
ஸ்ரீலோலன்	1	4	நவநீத கிருஷ்ணன்	2	0
அனந்தசாகரன்	0	8	ருக்மணீகாந்தன்	2	0
நாகரிகப்போர்	1	8	சாமளநாதன்	2	0
கயற்கண்ணி	0	12	வீரவஸந்தா	0	8
ஆனந்தமடம்	1	0	மாதவமணி	0	3
அனுமான்சிங்	0	12	கனகபுரி	1	8
அசலாம்பிகை	2	0	மங்கையர்க்கரசிகாதல்	0	12
கிருஷ்ணவேணி	2	0	இரத்னபுரி ரகஸ்யம்	4	0
சிந்தாமணி	2	0	தபால்கொள்ளை	0	14
கற்பகசுந்தரி	2	12	ஞானசெல்வாம்பாள்	9	10
எங்கள் ஊர்	1	0	மின்சாரமாயவன்	1	8
இராதை	1	4	கனகபூஷணம்	3	8
சுவர்ணசுந்தரம்	2	0	இந்திராபாய்	2	8
திக்கற்ற இரு குழந்தைகள்	1	8	மஞ்சளறை மர்மம்	1	8
தலையணை மந்திரம்	1	0	விளையாட்டு சாமான்	1	6
தீனதயாளு	0	12	மதனாம்பாள்	3	0
வசந்தோத்யானம்	3	0	பத்மாஸனி	0	14
விஜயமார்த்தாண்டம்	1	4	பவளத்தீவு	3	0
குற்றமும் சிக்ஷையும்	1	12	கற்கோட்டை	2	0
முத்து மீனாக்ஷி	0	8	அமராவதி	4	0
உதயலன்	0	12	கமலசேகரன்	1	12
கனகமாலை	1	4	தினகரசுந்தரி	1	0
நவரத்னலாகெட்	0	12	தேவசுந்தரி	1	4
மணிவாசகன்	1	4	ஆனந்தசிங்	2	0
சந்திரசேகரன்	1	0	மாதவிமாதவன்	2	0
காந்திமதி	2	0	பூங்கோதை	0	10
ஷண்முகநாதன்	1	4	வீரநாதன்	0	12
அமிர்தம்	0	8	சுவர்ணாம்பாள்	0	12
கனகாம்பாள்	1	0	கோமளவல்லி	0	8
வீரபத்தினி	1	0	மதனபூஷணம்	1	0
ஸவர்ணாம்புஜம்	0	8	கடற்கொள்ளை	3	4
கனகாம்புஜம்	2	12	நவனீதாம்பை	1	0

இராஜாமணி	2	0
அற்புத மர்மங்கள்	1	12
கற்பகச்சோலை	1	4
மலையானபகவதி	1	0
மனமோகனமாணிக்கம்	1	8
இரத்னபாய்	1	12
பன்னிரு மரகதம்	3	0
விசித்திரத்துப்பறியுங்கண்	3	0
ஆனந்தகதாகல்பகம் 4 வது	3	0
காந்தி உண்மைசிடன்	1	0
ஜயவீரன்	1	12
அங்கயற்கண்ணி	1	12
அம்பலத்தரசன்	1	8
அம்பலவாணன்	1	4
மாணிக்கவல்லி	1	0
அமிர்தகுமாரி	1	4
திருக்கழுக்குன்றக் கொலை	1	8
சாரதை தந்திரம்	0	12
இராமனுதன்	2	12
சுந்தர தீரன்	1	8
ஜடாவல்லவர்	2	8
மதனன் நீதிமதி	1	0
வீரபாகு	1	8
தளுக்குசுந்தரி	1	0
இராஜீவி	1	0
ரெயில் திருடன்	0	10
சாந்திபுரக் கொலை	1	0
மங்களசுந்தரம்	0	12
ஸுவர்ச்சலா	0	8
கள்ளக்காதலன்	2	0
பச்சைமோதிரம்	1	0
பவளப்பதுமை	1	4
மேகாஞ்சனி	1	0
மேனகா	3	0
கும்பகோணம் வக்கீல்	3	0
சௌந்தர கோகிலம்	6	0
மாயாவிநோதப் பரதேசி	5	0
மதனகல்யாணி	4	8
பூர்ணசந்திரோதயம்	7	8
திகம்பரசாமியார் பால்யலீலை	5	0
பாலாமணி	2	8
வஸந்தமல்லிகா	1	8
வித்யாசாகரம்	1	4
லொடபடசிங்	0	12
கமலாம்பாள்	1	8
கப்பற்கொள்ளை	1	4
இராஜராஜேஸ்வரி	1	8
சரோஜினி	2	0
கருங்குயில்குன்றக்கொலை	4	2
வித்யானந்தர்	1	8
ஆனந்தமனோகரன்	1	0
பொற்றொடி	1	2
விசித்திர தேவலோக கோர்ட்	0	8
குடும்பவிநோதக்கதைகள்	2	0
பிரபஞ்சவிநோதக்கதைகள்	1	0

சிறந்த தமிழ் நாடகங்கள்.

இந்திரமோகன	0	8
இராமானுஜர்	0	8
திலோத்தமா	0	12
திருஞான சம்மந்தர்	0	12
தொண்டரடிப்பொடி	0	5
சங்கராச்சாரியர்	0	5
இராமாமிர்தம்	0	4
சத்யதேவி	1	0
ரோஜாதேவி	1	8
மாணிக்கவாசகர்	0	8
வஸந்த கோகிலம்	1	4

ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் நாடகங்களும் கிடைக்கும்.

இராஜீய தேசிய நூல்கள்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் 2 பாகம்	4	0
சிவாஜீ	1	0
காந்தி விசாரணை	0	4
திலகர்	0	8
சத்திய சோதனை	2	8
மகாத்மா காந்தி	1	8
சமரஸமுயற்சி	0	8
காந்தி சிறை அனுபவம்	0	8
இந்திய ஸ்வராஜ்யம்	0	8
ஐஸ்வரிய சக்கரம்	0	8
ஒத்துழையாமை ஏன்	0	8
ஒத்துழையாமை விவரம்	0	4
இந்தியாவும் சுயாட்சியும்	1	8
காந்தி ஆத்மசக்தி	0	10
அசோகசக்கரவர்த்தி	0	8
கும்பமகாராணா	0	6
இராஜராஜசோழன்	0	10
புத்தர் ஜாதகக் கதைகள்	0	10
நெப்போலியன்	1	8
பாரதநாட்டின் நிலைமை	1	0
இந்தியா இழந்துவதனம்	1	0
இராஜரீக சாஸ்திரம்	1	0

ஜகன்மோகினி ஆபீஸ் தோடித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

மனிதவாழ்க்கையும் காந்தி யடிகளும்	2	8
அபதிர்ஷ்ட இந்தியா	2	0
இந்தியபிதா	2	0
மாயாமேயோ	2	0
இந்தியமாதா	1	8
மூகம்மதலி ஷவுக்கதலி	1	0
ஆரோக்யவழி	0	12
சர்க்கா	0	8

வியாபார நூல்கள்.

வர்த்தகக் கணித நூல்	2	0
வியாபாரதந்திரம்	1	8
கைத்தொழில் முறை	1	8
வர்த்தக யுக்தி	0	12
புதிய ஊக்கம்	0	2
திரவியம் திரட்டும் வழி	0	6

வைத்திய நூல்கள்,

ஆரோக்ய சாஸ்திரம்	2	0
மருத்துவ சாஸ்திரம்	2	8
அகஸ்தியர் கயனவிதி	1	4
ஷெடி பின் எண்பது	0	12
வைத்தியத் திரட்டு	0	12
கசகாண்டம்	0	8
சத்வைத்யஜீவனம்	0	8
மதுமேகம்	0	8
க்ஷயரோகம்	0	8
அகஸ்தியர் ரணவைத்தியம்	0	12

வேதாந்த நூல்கள்.

பகவத்கீதை வசனம்	3	0
மதஸ்தாபகர்களின் சரித்திரக்கொத்து	2	8
ஆழ்வார்கள் சரித்திரம்	1	8
சாதனசதுட்டயம்	3	8
ஞானக்களஞ்சியம்	3	0
வேதாந்த பாஸ்கரன்	3	0
ஞானயோக ரகஸ்யம்	3	0
அத்யாத்மயோகம்	2	8
ஞானயோகம்	2	4
இராஜயோகம்	2	4
வேதாந்தரகஸ்யம்	2	0
கர்மயோகம்	1	0
பக்தியோகம்	0	12
ஆங்கில ஆசான்	2	0
ஆனந்த ஆங்கில பாஷாபோதினி	2	0

சங்கீத நூல்கள்.

ஸ்ரீ தியாகராஜ ஹ்ருதயம் 3 பாகங்கள்	10	0
ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்	3	0
ஸங்கீத ரத்னாவளி	3	0
ஸங்கீதாஸர்ணவம்	2	8
ஸங்கீத சித்ராம்பரி	1	8
ஸங்கீத ஸர்வார்த்த சிந்தாமணி	2	8
பாண்டுரங்கபக்தவிஜயம் 5 பாகங்கள்	6	0
ஜாதக ரகசியம்	5	0

இதர பிரசுரங்கள்.

கௌஹர்ஜான் காதல் 1 & 2 பாகம் பாகம் 1-க்கு	I	8
பண்டிதை மெஸ்மெரிஸா 3-ம் பதிப்பு	1	8
மலை விழுங்கி மகாதேவன்	0	6
லோகாதிசய விளக்கம்	1	4
சுவாசமே உயிர்	1	8
ஜ்யாரத்தல் குபூர்	0	12

இல்வாழ்க்கை சம்பந்தமான புஸ்தகங்கள்

மணவாழ்க்கையின் மர்மங்கள்	2	4
மானிட இரகசிய சாஸ்திரம்	1	0
கருப்ப சாஸ்திரம்	1	8
சரீர மர்ம சாஸ்திரம்	1	0
கொக்கோகம் மூலம்-உரை	1	4
காதல் வாழ்க்கையின் மர்மங்கள்	2	0
சிற்றின்ப வெற்றி	2	4
ஜீவவசிய பரம ரகஸியம்	3	0
இல்வாழ்க்கையின் இரகஸியங்கள்	2	0
இன்பவாழ்க்கையின் ரகஸி	2	0
யங்கள்	2	0
மனோவசிய சாஸ்திரம்	1	8
மதனகம லீலை	2	0
சிற்றின்ப ஞானசிந்தாமணி	1	4
ஸ்திரிபுருஷ ரகசியம்	1	4
மதன ரதி ரஹஸ்யம்	2	0
விறலி விடு தூது	0	12
முத்தத்தின் மர்மம்	1	8
மங்கையின் முத்தம்	2	0

மேற்கண்ட புத்தகங்களைத் தவிர மற்ற புத்தகங்களையும் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளே

"ஜகன்மோகினி" யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனா (2-பாகங்கள்)	ரூ.	2	0	0
	ருக்மிணீ காந்தன்	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனா	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்		1	12	0
ருக்மிணீ காந்தன்				
சண்பகவிஜயம்				
[illegible]ளரீமுகுந்தன்				

" ஜ[illegible]

26[illegible]

இனம்

ஒரு அணா ஸ்ட[illegible]
போதிராயர்" "ராவ்பச[illegible]
நாவல்கள் அனுப்பப்[illegible]

வத்[illegible]

அமிர்தாஞ்சனம்



...ாய்களுக்கும் திவ்ய ஔஷதம்

...வருஷங்களாக...

...ங்குவது

...க்கும்

...டிபோ,

...ன்னை.